உலகைக் காட்டும் பலகணி

யுனெஸ்கோ

கூரியர்

டிசம்பர் 1969 ஆண்டுச் சந்தா ரூ. 10.50 தனிப்பிரதி ரூ. 1.00

மங்கோலியா

உலகக் கலைக் கருவூலங்கள்

38

வடகடலின் மக்கள்

11ஆம் நூற்ருண்டின் இவ்வரிய வெண்கல உருவம் ஃப்ரோ எனும் முற்கால ஸ்காண்டிநேவியரது கடவுளின் சிலையாகும். அவர்கள் வேதாளத்தலை முகப்புள்ள கப்பல்களில் ஸ்காண்டிநேவியாவிலிருந்து இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், மத்திய தரைக்கடல் பகுதிகளுக்குச் சென்று வாணிகம் செய்து, ரஷ்யாவில் நீப்பர் நதிக்கரையில் குடியேறினர். ஒருவேலை அவர்கள் தாம் அமெரிக்காவை அடைந்த முதல் ஐரோப்பிய கப்பலோட்டிகளாக இருக்கலாம். அவர்கள் உலோக கலைத்தொழிலில் சிறந்து விளங்கினர் ஃப்ரோவின் சிலை ஸ்டாக்ஹோமுக்குதென் மேற்கில் சோடர்மன்லாந்தில் கண்டெடுக்கப்பட்டது.

Museum of National Antiquities, Stockholm
Photo © S. Hallgren - A.T.A. Stockholm

கூரியர்

டிசம்பர் 1969

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினுல் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினுல் பதின்மூன்று பதிப்புகளாக வெளியிடப்படுகிறது.

ஆங்கிலம்	ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு	இத்தாலியன்
ஸ்பானிஷ்	ஹிந்தி
ரஷ்யன்	தமிழ்
ஜெர்மன்	ஹீப்ரு
அராபிக்	பெர்சியன்
அமெரிக்க ஐக்கிய நாடு	

விற்பனே, வினியோக அலுவலகம்:
458, பூந்தமல்லி நெடுஞ்சாலே, சென்னே-10.
ஆண்டுச் சந்தா ரூ. 10.50

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களேயும், கட்டுரைகளேயும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளேத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப் படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளேப் போதிய தபால் தலே இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லே.

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினுய்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர்:
ஸாண்டி காஃப்ளர்
உதவிப் பிரதம ஆசிரியர்:
ரெனி காலோஸ்
பிரதம ஆசிரியருக்கு உதவியாளர்:
லூஸியோ அட்டினெல்லி
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலப் பதிப்பு: ரொனுல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு: ஏ. சந்திரஹாஸன் (டில்லி)
ஹீப்ரு: அலெக்ஸாண்டர் பெலி (ஜெருசலம்)
தமிழ்ப் பதிப்பு: தெ. பொ. மீனுட்சிசுந்தரன் (சென்னே)
தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணேவர்கள்:
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸ்தபா
ஆராய்ச்சி: ஒல்கா ரோடல்
அமைப்பு, சித்திரம்: ராபர்ட் ஜாகுமின்

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

The UNESCO Courier

December, 1969 No. 30

No 11 - 1969 MC 69-1-250 A

22 MAR 1970

இதழ் 30

பக்கம்

5 எராஸ்மஸ்
எக்காலத்திற்குமுரிய அனேத்துலகச் சிந்தனேயாளர்
—ஜீன் கிளாட் மார்கோலின்

15 மங்கோலியா
கான்ரட் ஃபாக்நிட்சு - லெவ்கோஸ்டிக்காவ்

18 ஸ்டெப்பியிலிருந்து இக்காலத்திற்கு

20 மங்கோலியாவில் ஐ. நா.வும் அதன் தனிச் செயல் நிறுவனங்களும்

22 அண்மைக் கிழக்கின் நாகரிகத் தொடக்கம் பற்றிய புதிய விவரங்கள்
ஈரானில் 5000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த சோகா மிஷ் நகர் தரும் செய்திகள்
—பின்ஹாஸ் பி. டெலுகாஸ்,
ஹெலன் ஜே. காண்டர்

26 மனிதனும் விலங்கும்
ஈரானின் பண்டைய கலங்களில்

29 பெண்களே விட ஆண்கள் விரைவில் இறக்கின்றனர்
சோவியத் சமுதாய ஆய்வாளரின் கருத்துக்கள்
—போரிஸ் உர்லானிஸ்

31 உருப்படிவ மூலம் வரலாறு கற்பிக்கும் முறை
ஹங்கேரியிலுள்ள உயர் ஆரம்பப் பள்ளியொன்றில்
—பால் அல்மாசி

32 யுனெஸ்கோ செய்தியறை

33 யுனிசெஃப் வாழ்த்து மடல்கள்

2 உலகக் கலேக் கருவூலங்கள்
வட கடலின் மக்கள்

அட்டைப் படம்

இன்று மங்கோலியா பொருளாதார, சமூக, பண்பாட்டுத் துறைகளில் பெரும் மாறுதல் அடைந்து வருகின்றது. நாம் சிறு வயதில் புவியியல் நூல்களில் படித்தது போல் அது இன்று பின்தங்கிய நாடாக இல்லே. நமது நாட்டு உடையிலுள்ள மங்கோலியத் தம்பதிகளேப் படத்தில் காணலாம். (15ஆம் பக்கக் கட்டுரை பார்க்க)

Photo © J. Kosidowski, Warsaw

Photo © Doeser, Netherlands

எராஸ்மஸ்

எக் காலத்திற்குமுரிய அனைத்துலகச் சிந்தனையாளர்

ஜீன் கிளாட் மார்கோலின்

2ஆம் உலகப் போரின் பிறகு எழுந்த புதிய ராட்டர்டாமின் பெரும் சந்தைச் சதுக்கத்தில் எராஸ்மஸின் சிலை நிற்கின்றது. (இடப் புறம்). 1622இல் ஹென்றி டி கேஸர் இச் செப்புச் சிலையைச் செய்வதற்கு முன், 1557இல் பல்வண்ணக் கற் சிலையும், 1549இல் அதற்கு 100 ஆண்டுகளுக்கு முன் எராஸ்மஸ் பிறந்த வீட்டின் முன்னால் நிறுத்தப் பட்ட மரச் சிலையும் வைக்கப்பட்டி ருந்தன. கீழே, 16ஆம் நூற்றாண் டில் செதுக்கப்பட்ட ராட்டர்டா மின் படம். அப்போது அது ராட் நதிக்கரையில் சிறு நகராக இருந் தது.

1469ஆம் ஆண்டு அக்டோபர் 27–28ஆம் தேதி இரவில் ராட்டர் டாமில், சந்தேகத்துக்கு மட்டுமல்ல, அவமானத்துக்கும் இடம் தரும் சூழ் நிலையில் பிறந்த ஒரு குழந்தை, தன் வாழ்நாளில், மனிதத் தன்மையின் மன் னன் என்று மாண்பு பெற்று, ஐந்து நூற் றாண்டுகளாய் மனித சிந்தனை வளர்ச் சியிலே மகத்தான முன்னேற்றம் காண வழி வகுத்ததுதான், எராஸ்மஸின் அற்புத வரலாறு. எராஸ்மஸின் பிறப்பு 1469ஆம் ஆண்டிலா, 1466, 1467,1468ஆம் ஆண்டிலா என்பது கூடத் தெளிவாக அறுதியிட்டுக் கூற முடியாத ஒன்று. ஆயினும் எராஸ் மஸின் ஐந்நூறாவது ஆண்டு நிறைவு விழாவை உலகெங்கும் இன்று கொண்டாடும் அளவுக்குப் புகழ் பெற்று விட்டது, அவர் வரலாறு.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன் கிளாட் மார்கோலின், எராஸ்மஸ் பற்றிய செய்தி களுக்கு ஐரோப்பிய வல்லுநர்களில் மிக முக் கியமானவராவார். டச்சு சிந்தனையாளரைப் பற்றிய மிகச் சிறந்த எட்டு நூல்களின் ஆசிரி யருமாவார். அவைகளுள் ஒன்றான எராஸ் மஸின் "டெக்லமேஸியோ தெ பியுரெஸ் ஸ்டேடிம் அக் லிபரேலிட்டர் இன்ஸ்டுடியன் டிஸ்" என்ற நூலின் மொழி பெயர்ப்பும் திறனாய்வுமாகும். இந்நூலுக்கு 1967இல் அக்கடமி ஃபிரான்காய்ஸின் ப்ரிக்ஸ் லாங் லோய்ஸின் பரிசு கிடைத்தது. தற்போது அவர் எராஸ்மஸின் அனைத்து நூல்களின் இரண்டாம் பதிப்புப் பணியை ராயல் நெதர் லாந்து விஞ்ஞான, இலக்கிய அகடெமிக்காக ஆற்றி வருகிறார்.

பாஸ்லே முதல் நியூயார்க்வரை, மான்ஸ் முதல் டூர்ஸ் வரை, ப்ரஸ்ஸல்ஸ் முதல் ராட்டர்டாம், பாரிஸ் வரை, அவர் ஐந்நூறாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி, நடந்துள்ள கருத் தரங்குகள், மாநாடுகள், அவற்றை ஒட்டி வெளியாகியுள்ள ஆராய்ச்சி நூல்கள் ஆகியவற்றிலிருந்து தெளி வாகியுள்ள ஓர் உண்மை, எராஸ் மஸின் வரலாறு, தத்துவ உலகில் உருவான விடைகள் அளித்துள்ள தைக் காட்டிலும் பல கேள்விக் குறிகளை எழுப்பியுள்ளது என்பதுதான். தத்துவ வரலாற்று அறிஞர்கள் இந்த உண்மையை ஒப்புக் கொண் டுள்ளனர்.

''மடமையின் மகிமை'' என்ற எராஸ்மஸின் நூலின் பதிப்புகளும் மொழிபெயர்ப்புகளும் பல வெளி யாகியுள்ளன. ஆயினும் அந்நூலின் தலைப்பு புகழ் பெற்றுள்ள அளவுக்கு நூலின் கருத்துக்கள் புகழ் பெறவில்லை. மறைந்தபின் புகழ் பெற்றுள்ள பெரி யார்கள், மனித சிந்தனையைக் கவர முடியும் என்று பொதுவாக எதிர்பார்ப் பதற்கு மேலாக, எராஸ்மஸ் புகழ் பெற்று, மனித சிந்தனையிலும், நாடுகளின் எண்ண மரபிலும் தம் புகழைப் பொறித்துள்ளார்.

எராஸ்மஸ் மனித சமுதாயத்தின் தலைவர்களில் ஒருவராய் விளங்கவில்லை. தத்துவ நெறி எதையும் அவர் உரு வாக்கவில்லை. எராஸ்மஸ் எண்ணம்,



Photo Netherlands Ministry of Education and Science

நாடோடி அறிஞரின் வாழ்க்கை

எராஸ்மஸ் உணர்வு என்று இன்று போற்றப்படுவதெல்லாம், பொதுப் படையாக அவர் உருவாக்கிய கருத்துக்களையும், மனித உணர்வில் அவர் உண்டாக்கிய மாறுதல்களையும் பற்றியவைதான். லூத்தர், ஸ்விங்லி, கால்வின் ஆகியோர் சமய நெறிகளை உருவாக்கியது போல், அவர் சமய நெறி எதையும் நிறுவவில்லை. தங்கள் சமயக் கருத்துக்கள், அரசியல் எழுச்சிகள் காரணமாய், அவர் நெருங்கிய நண்பர்கள் பலர், நாட்டில் அமைதியின்மை, உள்நாட்டு, வெளிநாட்டுப் போர்கள் ஆகியவற்றின் விளைவாய்ப் பல அல்லல்களுக்கு ஆளாக வேண்டியிருந்த நிலையிலும், எராஸ்மஸ் அடக்குமுறை எதனாலும் அல்லல் படாமல் தப்பினார்.

அவர் பல நூல்கள் எழுதினார். ஆனால் புலவர்களுக்கு மட்டுமே புரியக் கூடிய லத்தீன் மொழியில் தான் அவற்றை அவர் எழுதினார். அவர் எழுதிய நூல்களில் பல, சொல்லிலக்கண விளக்கங்கள், விவிலிய நூலுக்கு விளக்க உரைகள், கிரேக்க மொழியிலிருந்து லத்தீன் மொழியாக்கங்கள் ஆகியவை. ஆராய்ச்சி வல்லுநர் ஒரு சிலரைத் தவிர, நம் காலத்துப் பாமர மக்களைக் கவரக் கூடிய நூல்களல்ல, அவை.

அப்படியிருந்தும் அவர் அழியாப் புகழ் பெற்றுள்ளாரென்றால், வரலாற்றில் இடைக்காலத்திலிருந்து மறுமலர்ச்சிக் காலம் வரை, தம் வாழ்நாளில், சிக்கலான, சோதனை மிக்க நாட்களில் தம் சிந்தனை மரபின் செல்வாக்கை நிலை நாட்டுவதில் வெற்றி பெறாத, வாழ்வில் வெற்றி காணாத, இந்தடச்சு முனிவரை ஏத்திப் போற்றி, இன்று அவர் கருத்துக்களை நமக்குத் தேவையானவை என்று யுனெஸ்கோ வலியுறுத்துகிற தென்றால், அதற்குக் காரணம் என்ன?

இந்த ராட்டர்டாம் தத்துவவாதியின் பலதரப்பட்ட வாழ்க்கை, அவர் எண்ணங்களிலிருந்து தத்துவ நெறி ஒன்றைக் கடைந்தெடுக்க முயலும் உரையாசிரியர்களின் முயற்சியை முறியடிக்கின்றது. வளர்ச்சியின் மாறுதல்களால் வளம்பெற்ற அவர் மனம், சூழ்நிலைக்கேற்ப மாறும் ஆற்றல் மிக்க அவர் இயல்பு, அவர் வாழ்க்கை முறையையும் மீறி வரலாற்று நிர்ப்பந்தங்களும் வாழ்க்கையின் சோதனைகளும் அவருக்கு ஏற்படுத்திய ஆபத்துக்கள், அவற்றை ஒட்டி முனைப்பு பெற்ற முரண்பாடுகள் ஆகியவற்றின் காரணமாய், தத்துவ நூற்களஞ்சியங்களில் சாதாரணமாய்க் காணப்படும் பாகுபாடுகளுக்கு அடங்காதவராய், அவர் அப்பாற்பட்டு நிற்கின்றார்.

உலகோடு ஒத்துச் செல்ல மறுத்துத் தனி முனைப்புக் கொண்டு அவர் நின்ற போதிலும், நம் காலத்திலிருந்து பெரிதும் மாறுபட்ட காலத்துக்குரியவராய் அவர் வாழ்ந்த போதிலும், காலத்தைக் கடந்து நிற்கும் உலகப் பொது அறிஞராய் அவர் வாழ்ந்த 16ஆம் நூற்றாண்டிலிருந்து நோக்கினாலும், இன்றைய இருபதாம் நூற்றாண்டிலிருந்து நோக்கினாலும், மனிதத் தன்மைக்கு முரண்பட்ட தேசியத்தின் மயக்கங்களிலிருந்தும் மாய்மாலங்களிலிருந்தும் விடுபட்டு நின்ற பேரறிஞராய்—அவரை நாம் போற்றுவது ஏன் என்பதை இக் கட்டுரையில் நான் ஆராய முயல்வேன்.

கௌடா ஊரைச் சேர்ந்த, கீர்ட், அல்லது கெரார்ட் என்று அழைக்கப்பட்ட ஒரு சமய குருவுக்கும், ஸெவன் பெக் ஊரைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் மகளுக்கும், திருமணமாகாமல் பிறந்த அக்குழந்தை, தம் பெற்றோர்கள் மறைவுக்குப்பின், டெஸிடெரியஸ் எராஸ்மஸ் ரோட்டர்டாமஸ் என்ற லத்தீனப் பெயரை ஏற்று, தான் பிறந்த சிறு ஊரின் பெயர் புகழ் பெற்று நிலைநிற்கச் செய்து விட்டது.

முதன் முதலில் கௌடாவில், பீட்டர் விங்கெலிடம் அவர் பாடம் கற்றார். உட்ரெக்டில் தேவப் பாடல் குழுவின் உறுப்பினர் பயிற்சிக்குப்பின், தெவென்டரில் புனித லெப்வின் திருச்சபையோடு இணைந்த புகழ் பெற்ற பள்ளியில், தமது ஒன்பதாவது, அல்லது, பத்தாவது வயதில், அவர் பயிற்சி பெற்றார். அவர் பெற்றோர்கள் கொள்ளை நோய்க்குப் பலியான பின், மாமன்மார் ஆதரவில் அவர் வளர்ந்தார். அவர்கள் அவர் உடைமைகளைப் பறித்துக் கொண்டு, ‘பாமர வாழ்க்கைச் சோதரர்கள்’ நடத்திய துறவற நிலையத்தில் சேர்ந்து, துறவுத் தொண்டராய் வாழப் பக்குவம் பெற, அவரை ஹெர்டன்பாக்குக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு தம் வாழ்க்கையில் மூன்று நான்கு ஆண்டுகளை வீணாக்கியதாக அவர் பின்னர் கூறினார். ஆயினும் அளவை இயல், தர்க்க ரீதியான தத்துவ இயல், விவிலிய ஆராய்ச்சி ஆகியவற்றில் அவர் பயிற்சி பெற்றதுடன், அங்கு தங்கியிருந்த கடைசி நாட்களில், இலக்கியக் கலைத்துறை இயல்களிலும் அவர் பயிற்சி பெற்றார்.

கொள்ளை நோயின் காரணமாய், கௌடாவுக்குத் திரும்பிச் சென்ற அவர், 1487இல் - ஸ்டெய்னில் உள்ள அகஸ்டீனியத் துறவு நிலையத்தில்



Photos© Snark International

இடப்புறக் கோடி: எராஸ்மஸின் முழு முகப் படம் இது ஒன்றுதான் உள்ளது. ஹாலந்தி லிருந்தபோது எராஸ்மஸுடன் நட்புக் கொண்ட புகழ்மிகு ஜெர்மானிய ஓவியர் ஆல்பிரெக்ட் டியூரர் 1520இல் இதைக் கரியால் வரைந்தார். ஹான்ஸ் ஹால்பெய்ன் (பின் அட்டை பார்க்க) எராஸ்மஸையும் அவர் கைகளையும் பல படங்களில் தீட்டியுள்ளார். இடப்புறம்: எராஸ்மஸின் எழுதும் வலக்கை. அறிஞர் எராஸ்மஸின் நகைச் சுவையை அவருடைய கையெழுத்துப் படிகளின் ஓரங்களில் காணப்படும் கிறுக்கல்களில் (கீழே) காணலாம். எல்லாவற்றிற்கும் மேலேயுள்ளது நீண்ட மூக்குள்ள அவருடைய முகத்தின் கேலிப் படம்.

Photo Netherlands Ministry of Education and Science



சேர்ந்து, 1492இல்—கிறிஸ்தோபர் கொலம்பஸ் அமெரிக்காவை அடைந்த அதே ஆண்டில், ஏப்ரல் 25ஆம் தேதி, சமயக் குருவாக ஆசார முறைப்படி ஏற்கப்பட்டார். அங்கு அவர் தம் விருப்பப்படி இலக்கிய நூல்களைக் கற்கவும், 'லத்தீனச் சிறப்புக்கள்', என்ற இத்தாலிய மக்கண்மை அறிஞர், லொரென்ஸோ வல்லாவின் நூலை ஆராய்ந்து கற்கவும், லத்தீன் மொழியில் கவிதைகள் இயற்றவும், வாய்ப்புப் பெற்றார். பின்னர் அத்துறவு நிலையத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற ஸெர்வேடியஸ் ரோஜருடன் அவர் நெருங்கிய நட்பு கொண்டார். ஆயினும், துறவு நிலையப் பணிகளைக் காட்டிலும், இலக்கியப் பணிகளில்தான் அவருக்கு அதிக ஈடுபாடு இருந்ததெனத் தோன்றுகிறது. ஸ்டெயின் நிலையத்தை விட்டுச் சென்று, காம்ப்ராய் பிஷப்பாக இருந்த பெர்கனைச் சேர்ந்த ஹென்ரிக்கு லத்தீனக் காரியதரிசியாகப் பணியாற்ற அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. பிஷப் அனுமதி பெற்று, இறை இயலில் தேர்ச்சி பெற, அவர் பாரிசுக்குச் சென்றார்.

பாரிசில் லத்தீனப் பகுதியில் இயங்கிய மாண்டேகு கல்லூரியில் 1495இல் எராஸ்மஸ் சேர்ந்தார். 'நாற்றமும் நோய்க் கிருமிகளும் மிக்க அழுக்குப் பள்ளிக்கூடம்' என்று அவர் அக்கல்லூரி பற்றிக் குறிப்பிட்டார். ரெபலாய்கூட அக்கல்லூரி பற்றிப் பின்னர் அதே சொற்களைத்தான் கையாண்டார். அதற்குப் பின் காம்ப்ரோயிலும் ஹாலந்திலும் அவர் சிறிதுகாலம் தங்கினார். சிறந்த பேச்சாளி என்றும் கவிஞரென்றும், மொத்தத்தில் ஓர் அறிஞரென்றும், அவர் அங்குப் புகழ் ஈட்டினார். பின்பு பாரிசுக்கு அவர் திரும்பி, இலக்கியத்திலும் இலக்கணத்திலும் பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துப் பிழைப்பு நடத்தினார்.

அவரிடம் பாடம் கற்ற பிள்ளைகளில் ஒருவரான வில்லியம் மவுண்ட்ஜாய் பிரபு, 1499ஆம் ஆண்டு இறுதியில் இங்கிலாந்துக்கு வருமாறு அவரை அழைத்தார். இங்கிலாந்தில் அவர் மனநிறைவுடன் வாழ்ந்தார். அங்கு முக்கியமான சிலருடன் அவருக்கு ஏற்பட்ட நட்பு, அறிவாராய்ச்சியில் அவருக்கு இருந்த ஆர்வத்தை நிறைவு செய்யப் பொருள் வசதி செய்து தந்ததோடு, சிறந்த மக்கண்மைவாதியாகவும், சமயத் தத்துவ அறிஞராகவும், அவர் மலர, வாய்ப்பளித்தது. குறிப்பாக, இரு ஆங்கிலேய நண்பர்களுடன் அவர் கொண்ட நட்பு, அவர் தனிப்பட்ட வாழ்க்கையையும் சிந்தனை வளர்ச்சியையும் வளமாக்கப் பெரிதும் உதவியது. இவர்களில் ஒருவர், ஜான் காலெட். அப்பொழுது ஆக்ஸ்போர்டில் சமயத் தத்துவப் பேராசிரியராக இருந்தவர்; பின்னர் லண்டனில் புனிதர் பௌல் தேவாலயத்தின் டீனாகப் பொறுப்பேற்றவர். மற்றொரு நண்பர், தாமஸ் மோர். இலக்கியப் பணியிலும் நேர்மையான கேளிக்கைகளிலும், எராஸ்மஸின் உற்ற தோழராக விளங்கியவர். அவர் பிற்காலத்தில் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்று, லண்டன் டவரில் சிறைவாசம் அனுபவித்தவர். 'எக் காலத்துக்கும் ஏற்றவர்', என்று அவரைப் பற்றி எராஸ்மஸ் குறிப்பிட்டார். புகழ் பெற்ற அச்சொற்றொடரை, நாடக வல்லுநர் ராபர்ட் போல்ட், தம் நாடகம் ஒன்றுக்குத் தலைப்பாகச் சூட்டிப் புகழ்படுத்தினார். அந்நாடகம்

எதிர்ப்பு இயக்க வீரன்

அண்மையில் பல நாடுகளிலும் நடிக்கப்பட்டது.

1500இல் ஐரோப்பாவுக்கு எராஸ்மஸ் திரும்பினார். அன்று முதல், அறிஞர், தத்துவவாதி என்ற தம் இரு பொறுப்புக்களுக்கும் எராஸ்மஸ் உண்மையாக இருந்தார். அறிஞர் என்ற முறையில் 1500இல் 'ஆன்றோர் முது மொழி' என்ற நூலை அவர் வெளியிட்டார். தத்துவவாதி என்ற முறையில், 'கிறிஸ்துவப் போர் வீரனுக்கு வழிகாட்டி' என்ற தலைப்பில், 1503இல் அவர் வெளியிட்ட நூல், திருச்சபைக்குள்ளாகச் சீர்திருத்தங்கள் செய்வதன் அவசியத்தைத் துணிவுடன் வலியுறுத்தியது.

1536 ஜூலை 12ஆம் தேதி அவர் மரணமடைந்தவரை, அவர் நாடோடி அறிஞர் வாழ்க்கையையே வாழ்ந்து வந்தார். புரவலர் ஒருவரைத் தேடி அலைதல்; அரிய கையெழுத்துப் படிகளின் ஆராய்ச்சி; போர், கொள்ளை நோய், வேர்வை நோய், பின்னர் அபாயகரக் கருத்துக்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ஓட்டம், தம் இலக்கிய நூல்களை வெளியிடத் தனியுரிமை கோரிய ஓர் அச்சகத்தாரின் நச்சரிப்பு; ஏகன் அல்லது பிரஸ்ஸல்ஸில் மாமன்னரின் ஆணைகள் ஆகிய பல்வேறு உந்துதல்களிடையே ஊசலாடி அவர் வாழ்ந்தார்.

இவற்றின் பயனாக, (நெதர்லாந்து நாட்டின் லத்தீனியப் பெயரான) படாவியாவைச் சேர்ந்த எராஸ்மஸ், தம் சிறிய நாட்டிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்த போதிலும், ஐரோப்பியச் சூழ்நிலையின் நடுவே தங்கிப் பல்வேறு சார்புகளோடு பழகிய பரந்த நோக்கைப் பெறலானார். தம் அடிப்படை இயல்புக்கும், தம் எழுத்தின் அறவுணர்வுக்கும், கிறிஸ்துவ நெறிக்கும், உண்மையாயிருந்த அவர், பொதுமை நோக்கிலும் நெறியிலும் தாம் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டினைப் போற்றி வளர்த்தார். கிறிஸ்துவ உலகுடன் இணைபிரியாது இணைக்கப்பட்டதாக அவர் கருதிய இலக்கியக் குடியரசின் தலைமகனாய் விளங்கும் அளவுக்கு அவர் பண்பட்டிருந்தார்.

இன்றும் அவர் கருத்துக்கள் நமக்குப் பெரிதும் தேவையாயிருப்பதன் அடிப்படை, அவருடைய ஆழ்ந்த பொதுமை நோக்காகும். அந்நோக்கு, அவர் இலக்கியப் படைப்புகளில் மட்டுமல்ல, அவர் சொந்த வாழ்விலும், ஒளி வீசியது. ''நான் எவருக்கும் பயந்து எதையும் விட்டுக் கொடுப்பதில்லை'', என்று அவர் தம் குறிக்கோளைப் பெருமையுடன் விளக்கினார். அதேசமயத்தில், அரசியல், சமூகப் பகைமை உணர்வுகளால் அவர் பெரிதும் அலைக்கழிக்கப்பட்டார். ''நான் குல்ப் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று கிபெல்லீன் கூட்டத்தினரும், கிபெல்லீன் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று குல்ப் கூட்டத்தினரும் பழிக்கின்றனர்'', என்று அவர் குறைபட்டுக் கொண்டார். தம் தனியுரிமைகளையும் கௌரவங்களையும் இறுகப் பற்றி நின்ற தனியுரிமைவாதியாகவும் அவர் வாழவில்லை. தீர ஆர்ராயாமலோ, நேர்மையில்லாமலோ, சில விமர்சகர்கள் குற்றம் சாட்டியுள்ளதுபோல், குமுறலிலிருந்து ஒதுங்கித் தம் அறிவுண்டு, தாமுண்டு, என்று அசட்டையாக வாழவுமில்லை.

கொள்கைகளை விட்டுக் கொடுக்க அவர் சித்தமாயில்லை. ஆனால் அக்கொள்கைகளைச் செயல்படுத்தும் வழிமுறைகளை மாற்றிக் கொள்ள அவர் தயங்கவில்லை. செல்வங்களில் தலையாயதான சமாதானத்தைக் காக்க, ஜீன் கிராடோ தம் நாடகத்தில் கற்பனை செய்தது போல, ட்ரோஜன் போரைத் தவிர்க்க, டிராய் நகரைச் சேர்ந்த ஹெக்டரும், கிரேக்க யூலீசிஸூம், கையாண்ட தந்திரங்களையும் உபாயங்களையும், அவர் ஆதரிக்கத் தயங்கியிருக்க மாட்டார். கிறிஸ்துவ உலகம் இரண்டாகப் பிளவுபடுவதற்கு முன் அவர் மேற்கொண்ட முயற்சி, இந்த அடிப்படையில் தான் அமைந்திருந்தது. மார்ட்டின் லூத்தருக்கு அவர் உரிய மதிப்பளித்து உறவு கொண்டிருந்தார்.

எராஸ்மஸ் நடுநிலை வகித்தாரா? ''விழிப்படைந்து வரும் அறிவியலுக்கு இன்னும் திறமையாகச் சேவை செய்ய, நான் கூடியவரை நடுநிலைமை வகிக்க முயல்கிறேன். காட்டுமிராண்டித்தனமான பலத்தைவிட, நிதான மிதவாதத்தால் அதிக நன்மை ஏற்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'', என்று எராஸ்மஸ் கூறினார்.

பல்வேறு துறைகளையும் தழுவிய தம் நூல்களில், எராஸ்மஸ் வலியுறுத்திய பல கோட்பாடுகளில் மூன்றை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இம் மூன்றும் ஒன்றோடொன்று பின்னியவை. மீண்டும் மீண்டும் அவை அவர் நூல்களில் வற்புறுத்தப்படுவதால், அவற்றை எராஸ்மஸ் மிக முக்கியமாகக் கருதினார் என்பது புலனாகும். கல்வியின் முக்கியத்துவம், திருச் சபையின் ஒற்றுமை, சமாதானம் ஆகியவை தான் இந்த மூன்று கோட்பாடுகள்.

இன்று, பழைய பல்கலைக் கழக அமைப்புகளையும் கல்வி முறைகளையும் மாற்றவேண்டுமென்ற எழுச்சி அநேகமாக ஒவ்வொரு நாட்டிலும் எழுந்துள்ளது. கத்தோலிக்கத் திருச்சபைக்குள்ளும் வெளியேயும் விதிகளின் கடுமையைத் தளர்த்தும் மித்வாதப் போக்கும், பொதுமை நெறியைப் போற்றும் பரந்த நோக்கும், இரண்டாவது வாட்டிக்கன் கவுன்சில் ஆதரவில் தொடங்கியுள்ளன. மனித உரிமைகள் பற்றிய கோட்பாடுகள் எல்லா நாடுகளையும் பொறுத்த வரையிலும் உறுதியாகப் பின்பற்றப்பட்ட வேண்டுமென்றும், பேராசை, குறுகிய சுயநலம், பரஸ்பர அச்சம், அவநம்பிக்கை, விமோசனமில்லை என்ற ஏக்க உணர்வு ஆகியவற்றின் கேடுகளிலிருந்து மனித இனத்தை விடுவிக்க, உருவான, உறுதியான, நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், மக்கள் அனைவரும், எண்ணற்ற தனியார், பொது, நிறுவனங்கள் மூலம், வலியுறுத்தி வருகின்றனர், இன்று. எராஸ்மஸ் காலத்தில் இருந்த பிரச்னைகள், இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்னைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை என்ற போதிலும், இன்றுள்ள நிலையில், எராஸ்மஸ் அறிவுரைகளுக்கு நாம் செவி சாய்க்காமல் எப்படி இருக்கமுடியும்?

எராஸ்மஸின் நண்பர் மெலான்க்தானை ஜெர்மனியின் ஆசான் என்று பொருத்தமுடன் அழைப்பது போலவே, மக்கண்மைத் தத்துவப் பேரறிஞரான எராஸ்மஸை ஐரோப்பாவின் ஆசான் என்று அழைப்பது பொருந்தும். இவர் ஆசானைவிடச் சிறந்த கல்வி ஆலோசகராக அமைந்தார். குறிப்பான கல்விப் பணி எதிலும் நேரடியாகவும் உறுதியாகவும் ஈடுபட அவர் மனமோ, இயல்போ, அவரை உந்தவில்லை. ஆனால், குழந்தைகளின் உணர்ச்சி வரவேற்புகளுக்கும் அறிவாற்றல் உந்துதல்களுக்கும் ஏற்ற முற்போக்கான கல்வி முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று, கல்வி பற்றிய ஆராய்ச்சிகளில் முக்கியமான, ''குழந்தைகளுக்கு வளமான கல்வி'', என்ற ஆராய்ச்சி உரையில் அவர் வலியுறுத்துகிறார். பழைய முறையில், சிக்கலான சூத்திரங்களைக் கிளிப்பிள்ளை போல் ஒப்புவிப்பதற்கு முக்கிய இடம் தரப்பட்டதற்கு மாறாக, மாணாக்கரிடையேயும் ஆசிரியரிடையேயும் உரையாடல் நடக்க வேண்டுமென்று எராஸ்மஸின் புதிய முறை அறிவுறுத்தியது. பழைய முறையில், ஆசான் மாணவனைக் கடுமையாகத் தண்டிக்கக் கூடுமென்ற அச்சம் இருந்தது. புதியமுறை, குழந்தையின் தனித் தன்மையையும் இயல்பான உந்துதல்களையும் சுதந்திர ஆர்வத்தையும் மதித்து, அவை வளர வழி செய்யும்.

தம் காலத்து ஆசான்களுக்கும், தம் கல்வித் தத்துவ உரைகளும் ஆராய்ச்சி நூல்களும் எந்த இளைஞர்களைக் கவர எழுதப்பட்டனவோ, அந்த இளைஞர்களுக்கும், எராஸ்மஸ் அளித்த கல்வித் திட்டத்தில், மனப்பக்குவப் பயிற்சியும், ஒழுக்க, சமயக் கல்வியும், இணைபிரியாத அம்சங்களாகப் பின்னி நின்றன.

மாணவர்கள் படிப்பதற்குக் கிரேக்க, ரோம, பண்டை இலக்கியங்களிலிருந்தோ, திரு ஆகமங்களிலிருந்தோ, திருச்சபைத் தலைவர்கள் நூல்களிலிருந்தோ, அவர் பகுதிகளைத் தேர்ந்தெடுத்த போதும், வயதானவர்களும் தேர்ச்சி அதிகம் பெற்றவர்களும் ஹீப்ரு நூல்களையும் விவிலிய பழைய ஏற்பாட்டையும் படிக்க வேண்டுமென்று அவர் வழிகாட்டிய போதும், கொள்கை வெறியில் சிறைபடாமல் சுதந்திரமாய் இயங்கும் மனத்தை வளர்க்க வேண்டுமென்றே அவர் விரும்பினார். சிறந்த நூலாசிரியர்கள் படைப்புகளிலிருந்து பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை மாணவர்கள் பயில வேண்டுமென அவர் அறிவுரை கூறினார். ஆனால் சிசெரோ போன்ற தலைசிறந்த அறிஞராயினும்கூட, எந்த ஒரு தனி அறிஞரின் கருத்துக்களுக்கோ நடைக்கோ கண்மூடித்தனமாகக் கட்டுப்படுவது கண்டனத்திற்குரியது என்று அவர் வலியுறுத்தினார். அவர் தமது போதனைகளின் மூலம், இத் திறனாய்வு நோக்கை வளர்க்க

முயன்றார். ஒரு முறையுடனும் குறிக்கோளுடனும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்காமல், கண்ட ஆசிரியர்களின் நூல்களைப் படிப்பதும், அவர்கள் எழுத்து நடையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதும், மனத்தை மலடாக்கும் என்று அவர் எச்சரித்தார். 'சிறந்த நடை' என்ற அவர் நூல், அவருக்கே உரித்தான நுட்பமான நகைச்சுவைக்கும் நையாண்டிக்கும் சிறந்த எடுத்துக் காட்டு என்பதோடு, தனியொரு மனிதனையோ, நூலையோ, நாகரிகத்தையோ, கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது எவ்வளவு பெரிய மடமை என்பதையும் உணர்த்தியது.

ஆசான்களில் மக்கண்மை உணர்வு கொண்டவரென்ற முறையிலும், மனிதரில் பொது நோக்கும் நெறியும் கொண்டவரென்ற முறையில், எராஸ்மஸின் தனிச் சிறப்பு இதுதான்: உலகில் மனிதனைப் பற்றி அவர் கொண்டிருந்த கோட்பாட்டோடு நேரடியாக ஒட்டிய அவர் மக்கண்மை உறவு. ''மனிதன், மனிதனாய்ப் பிறக்கவில்லை; மனிதனாக அவன் கற்கிறான்'', என்ற அவர் கூற்று, அவர் தத்துவங்களுக்கு மையமானது. கல்விப் பயிற்றுவிக்கும் ஆசான், கல்விப் பயிற்சியில் தீவிரமாகப் பங்கு கொள்ளும் மாணவன், இருவரும் இணைந்த கல்விப் பயிற்சியின் பயனாகத்தான், விலங்கு இயல்பு மனித இயல்பாக மாறுகிறது என்பதை அவர் அக்கூற்றில் வலியுறுத்துகிறார்.

'பண்பாடு' என்ற கோட்பாட்டினை உருவான முறையில் செயல்படுத்திப் பலன் கண்டதில், எராஸ்மஸைப் போல், வேறெந்த மக்கண்மை அறிஞரும் வெற்றி கண்டதில்லை. 'மனித இயல்' கலைகள், மனத்திற்கு அழகு செய்யும் அணிகள் மட்டுமே என்று அவர் கருதவில்லை. 'மனிதன் தனக்காக மட்டும் வாழ்பவனல்ல.' சமூகத்திலும், திருச்சபையிலும், அரசாங்கத்திலும்தான், இப் பண்பாடு பொருளும் நிறைவும் பெறும். ''இயற்கை, ஆற்றல்மிக்க சக்திதான்; ஆனால் அறிவு அதனினும் ஆற்றல்மிக்க சக்தி'', என்று எராஸ்மஸ் எழுதுகிறார்.

தம் படைப்பின் அற்புத அமைப்பின், ஒருங்கிணைந்த அம்சமாக, மனித அறிவை ஆண்டவன் படைத்தார் என்று எராஸ்மஸ் நம்பினார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சில சமயங்களில் கெட்டதாகவும், சில சமயங்களில் நல்லதாகவும், பெரும்பாலும் நல்லது கெட்டதில் அக்கறை கொள்ளாமலும் உள்ள இயற்கை பற்றி எராஸ்மஸ் கொண்டிருந்த கோட்பாட்டில் காணப்பட்ட முரண்பாடுகளுக்கு, இயற்கை பற்றிய இறையியல் முரணாய்வு வாத இயலின் அடிப்படையில் தீர்வு காண வேண்டுமென்று அவர் நம்பினார். ''சுதந்திரமான இயற்றி நிலை,'' என்ற தலைப்பில், 1524இல், வெளியிட்ட ஆராய்ச்சி உரையில், அவர் அந்த அடிப்படைகளை விளக்கியுள்ளார்.

எராஸ்மஸின் கல்வி முறைகள்



Photo — Snark International

புதிய ஊழியின் தொடக்கம்: (மேலே) 2ஆம் உலகப் போரில் அழிந்த ''எபிடாஃப் ஃபார்தி பர்கோ மாஸ்டர் ஆப் நார்த்தாஸன்,'' இல் இளைய லூக்காஸ் கிரானக் மதச் சீர்திருத்தத்திற்கு முன் 16ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த மனித இன நல, மத புத்துணர்ச்சித் தலைவர்கள் சிலரை ஒன்றாகக் காட்டுகிறார். இதில் ஜெர்மானிய இறையியல் வல்லுநரும் சீர்திருத்தவாதியுமான பிலிப் மெலான்க்தன் (வலக்கோடி), எராஸ்மஸ் (வலப்புறமிருந்து நான்காவது), ஜெர்மனியின் மதச்சீர்திருத்தத் தலைவரான மார்ட்டின் லூத்தர் (இடப்புற முன்னணி) ஆகியோரைக் காணலாம்.

கற்பனை உலகிலிருந்து கழுமரத்திற்கு:- எராஸ்மஸ் முதலில் இங்கிலாந்து சென்றிருந்தபோது (1499-1500) வழக்குரைஞரும் அறிஞருமான தாமஸ் மூரைக் கண்டு அவருடன் நெருங்கிய நண்பரானார். பிறகு அவரது வீட்டில் சில நாட்களில் தமது 'இன் பிரைஸ் ஆப் ஃபோலி' என்ற அங்கதத்தை எழுதினார், (1509). தாமஸ் மூரும் ஓர் இலட்சிய அரசின் அரசாங்கத்தையும் சமூகத்தையும் விளக்கும் 'உடோப்பியா' என்ற புகழ்மிகு அங்கதம் எழுதினார். அரசரின் அன்பில் திளைத்து தலைமை நீதிபதியான தாமஸ்மூர் போப்பின் அதிகாரத்தை எதிர்க்க மறுத்ததிற்காக 1535இல் எட்டாம் ஹென்றி மன்னரால் தூக்கிலிடப்பட்டார். 1529இல் மூரின் மகள் மார்கரெட் ஜோப்பரின் விருப்பத்திற்கேற்ப ஹால்பெய்ன் தாமஸ் மூரின் (கீழேயுள்ள குடும்பம்) படத்தை வரைந்தார். அவள் இதை எராஸ்மஸுக்கு அளித்தாள். தாமஸ்மூர் பதவிச் சங்கிலி அணிந்து நடுவிலும் மார்கரெட் வலக்கோடியிலும் காணப்படுகின்றனர்.

Photo © Kupferstichkabinett der Oeffentlichen Kunstsammlung, Basel

ஐக்கிய ஐரோப்பாவின் முன்னோடி

ஜப்பானில் எராஸ்மஸ்

எராஸ்மஸின் இம் மர உருவம் 'எராஸ்மஸ்' என்ற டச்சுக் கப்பலின் முகப்பிலிருந்தது. பிறகு 'அன்பு' என்று பெயர் பெற்ற அக்கப்பல் 'பற்றுறுதி', 'நம்பிக்கை' என்ற இரு கப்பல்களுடன் 1598 இல் ராட்டர்டாமிலிருந்து கிழக்கிந்திய தீவுகளுக்குப் புறப்பட்டு மகெல்லான் கடற்கரை வழியாக பசிபிக்கை அடைந்தது. இச்சிலை இப்போது டோக்கியோ பொருட்காட்சிச் சாலையிலிருக்கிறது.

இன்று காலத்துக்கு ஏற்றவையாய் இருப்பதுடன், உலகனைத்துக்கும் இன்று பொருத்தமானவை என்ற கூற்றுக்குப் பல ஆட்சேபங்கள் எழுப்பப்படக்கூடும். அவற்றில் ஒன்று, லத்தீன் மொழி பற்றியது. உலக மொழியாக என்றுமே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படாத கிரேக்க மொழியைத் தவிர, போதனைக்கும் பயிற்சிக்கும் ஏற்ற ஒரே மொழி லத்தீனம் என்பது எராஸ்மஸ் கருத்து. அவர் காலத்து மக்களில் மிகச் சிறுபான்மையினரால்தான், — பிறப்பின் காரணமாய், சமூக, பொருளாதார செல்வாக்குப் பெற்றிருந்தவரால்தான் —லத்தீன் பேசப்பட்டு புரிந்து கொள்ளப்பட்டு வந்தது. வீட்டிலேயே கல்விப் பயிற்சி நடப்பதும், மாணவனின் தனித் தன்மைக்கு ஏற்ப, கல்விமுறை அமைந்திருப்பதும் சிறந்தவை என்ற எராஸ்மஸ் கருத்து, பெரிய வீட்டுப்பிள்ளைகளுக்கு மட்டுமே ஏற்ற போதனையல்லவா என்பதும் மற்றொரு ஆட்சேபம்.

குழந்தைகளுக்கு 'வளமான கல்வி' அளிப்பது பற்றி அவர் அயராது பேசிய போது கிறிஸ்துவக் கோமான்கள், செல்வச் சீமான்கள், நடுவர்க்கத்தின் உயர் மட்டத்தினர் ஆகியோர் குழந்தைகளை மனத்திற் கொண்டு தான் எராஸ்மஸ் பேசினாரா? பல்கலைக் கழகங்கள், அமைச்சரவைகள், நீதி மன்றங்கள், திருச்சபை ஆகிய இடங்களுக்கு வெளியே லத்தீன் மொழியை யார் பேசினார்கள்? எராஸ்மஸ் நூல்களை மூலத்தில் படித்தவர் எவர்? இன்று படிக்கக் கூடியவர் எவர்? இன்று லத்தீன் மொழிப் பயிற்சிக்கான வாய்ப்பு, பல நாடுகளில், செல்வாக்குப் பெற்ற செல்வர்களுக்கு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் கிட்டுகின்ற போதிலும், அவர் நூல்களை இன்று படிக்கக் கூடியவர்கள் வெகுசிலரே.

Photos Netherlands Ministry of Education and Science

இந்த ஆட்சேபத்திற்குப் பதில்கூறுமுகத்தான், நான் எடுத்துக் காட்ட விரும்புவது ஒன்றுதான். ஒவ்வோர் யுகமும் ஒவ்வொரு நாகரிகமும், தங்களுக்கேற்ற முறையில், பொதுமை நெறியின் வெளிப்பாட்டை உருவாக்குகின்றன. மறுமலர்ச்சிக் காலத்தின் போதும், ஐரோப்பிய மக்கண்மை இயக்கத்தின்போதும், அவற்றிற்கேற்ற பொதுமை நெறி வெளிப்பாடு உருவாயிற்று. அரசியல் தேசியம், சமயப் பிரிவுணர்ச்சி ஆகிய முரண்பாடுகளை எதிர்த்துப் போராட, இந்த இயக்கத்திற்குக் கிட்டிய பலமான கருவி, மீண்டும் கண்டு, போற்றிப் புதுப்பித்த, பண்டைக்காலப் பண்பாட்டு உணர்வு. இக் கருவியைப் பயன்படுத்துவதற்கு இயல்பாக ஏற்றவர், பள்ளிக்கூட ஆசிரியரும், கல்லூரிப் பேராசிரியரும் தானே.

அக்காலத்து மக்கண்மைவாதிகளும் குறிப்பாக அவர்களில் தலைசிறந்தவரான எராஸ்மஸும், ஐரோப்பாவில் பல நண்பர்களுக்கு எழுதிய ஆயிரக் கணக்கான கடிதங்களும் நமக்கு உணர்த்துவது, பண்பாடு எனும் இந்த 'மூன்றாம் சக்தியின்' முக்கியத்துவத்தைத் தான். மனித இனம் முழுவதற்கும் பிரதிநிதியென்று தவறாக அக்காலத்தில் மதிக்கப்பட்ட ஐரோப்பாவைக் கட்டுப்படுத்தித் தங்கள் செல்வாக்கை அங்கு நிலைநாட்டப் போராடிய இரு வல்லரசுகளுக்கு நடுவே நின்றது, இந்தப் பண்பாடுதான்.

இன்றைய உலகின், சமுதாய, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையை மனத்திற் கொண்டு பார்த்தால், லத்தீன் மொழி, உலகுக்குப் பொதுவானதா, கலாச்சார உயர்வு பெற்றதா, என்று கேள்வி கேட்பது பொருத்தமாகவே இருக்கலாம். ஆனால் ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தின் போதும், அதற்குப் பின்னரும், லத்தீன் மொழி, பொதுவாக அறிவையும் சமய நம்பிக்கையையும் பரப்பவும், குறிப்பாக ரோம, கத்தோலிக்க அறிவு விளக்கத்தைப் பரப்பவும், ஏற்ற கருவியாகப் பயன் பட்டது.

அனைத்துலக மொழியாக அமைய பிரெஞ்சு மொழியின் அருகதை பற்றி 18வது நூற்றாண்டில், ரிவரோல் பேசினார். 19வது நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலும், அதை மறுத்துப் பேசும் நிலை எழவில்லை. ஆனால் இன்றோ பண்பாட்டுப் பிரச்னை, வேறுவிதமாக மக்களை எதிர்நோக்குகிறது. ஒரு நாட்டின் அரசியல் உரிமைகளை வலியுறுத்த சிறந்த கருவிகளில் ஒன்று அந்நாட்டின் தேசிய மொழி என்று நாட்டு மக்கள் கருதுகின்றனர். பல நாடுகளில் பேசப்பட்டு, உலகப் பொது மொழிகளில் ஒன்றாக விளங்கக்கூடிய மொழி எதுவும் தேசிய உரிமை முழக்கத்துக்குக் குரல் கொடுக்காது என்றும் இன்று மக்கள் பொதுவாக அஞ்சுகின்றனர். எராஸ்மஸ், லத்தீன் மொழியில் பேசினார்; எழுதினார்; போதித்தார். ஆனால் விவசாயியும் நெசவாளியும் போன்ற பாமர மக்களும் விவிலியப் புது ஏற்பாட்டின் தம் மொழியாக்கத்தை நாளடைவில் பயில்வார்கள் என்று எராஸ்மஸ் எதிர்பார்த்தார். ஆனால் லத்தீன் மொழியில் அவர்கள் அதைப் பயில முடியாது; தங்களுக்குப் பழக்கமான நாட்டு மொழியில் தான் அவர்கள் படிக்க முடியும்.

அவருடைய நூல்களிற் சிறந்ததான 'மடமையின் மகிமை'யைப் பொறுத்த வரை, எராஸ்மஸ் என்றவுடன் மக்கள் மனத்தில் இந்நூலைப் பற்றிய எண்ணம் தான் தோன்றுகிறது. லத்தீன் மொழியில் அந்நூல் வெளியானவுடன்,

மனித இனநலக் கோட்பாட்டாளரின் சின்னம்

மேலே: 1533இல் ஹால்பெய்ன் செதுக்கிய இம் மர வேலைப்பாட்டில் எராஸ்மஸ் ரோமானியக் கடவுள் டெர்மினியஸின் தலையில் கை வைத்திருக்கிறார். அவர் 1520இல் எல்லைக் காவலாகும் இக் கடவுளைத் தமது சின்னமாகவும் 'சாவை எண்ணிப் பார்' என்பதைக் குறிக்கோளாகவும் தெரிந்து கொண்டு, டெர்மினியஸின் உருவமுள்ள வெள்ளி முத்திரையைச் செய்தார். அவரே டெர்மினியஸின் படத்தை வரைந்தார். (வலப்புறம்) நண்பர்கள் விருப்பப்படி பேஸிலுள்ள அவரது கல்லறையில் வரையப்பட்டுள்ளது.

உடல் நலிந்த எராஸ்மஸ் அயராது உழைத்து, குதிரையின் மேல் நீண்ட பயணம் செய்து வந்தார். சுகாதாரத்தைப் பற்றி கருதாத அக்காலத்தில் அவர் அதில் அக்கரை காட்டினார். இங்கு ஹால் பெயின் அவரைப் பயண உடையில் வரைந்துள்ளார். எராஸ்மஸ் தம்மை "உலகக் குடியாகவும், மக்கள் தொண்டனாகவும் எவருடனும் உறவு கொள்ளாதவராகவும்" கருதினார்,

Photos Netherlands Ministry of Education and Science

‘போரை அறியாதவரே போரை விரும்புவர்’

பிரெஞ்சு, செக் மொழிகளில் அது மொழிபெயர்க்கப்பட்டது. இந்த நாலரை நூற்ருண்டுகளில், இந்நூல் பல ஐரோப்பிய மொழிகளிலும், மற்ற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, உலகெங்கும் மக்களுக்கு அறிவு விளக்கமும் ஆறுதலும் அளித்துள்ளது.

இன்ருே சமூகத்தில் மகத்தான பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பண்பாடு என்பது, ஒரு சில சமூகப் பிரிவுகள், அல்லது செல்வாக்கு பெற்றவர்கள் ஆகியோரின் தனியுடமை என்ற கருத்துக்கு இன்று அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், ஸாக்ரேப், அல்லது அங்காரா, ரீகா அல்லது ஜெருசலம் போன்ற ஊரில் உள்ள ஏழை மாணவனும், தன் சொந்த மொழியில், ‘மடமையின் மகிமை’ என்ற புத்தகத்தின் மலிவுப் பதிப்பை வாங்கிப் படிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது, நமக்குத் தெம்பூட்டுவதாய் உள்ளது.

ஜப்பானிய, மலேய, யூதப் பண்பாட்டிலிருந்து, வரலாற்றுப் பின்னணியாலும் உணர்வாலும், எராஸ்மஸ் நூல் பெரிதும் வேறுபட்ட போதிலும், இந்நூல் ஜப்பானிய, மலேய மொழிகள் போன்ற ஆசிய மொழிகளிலும், அண்மையில் ஹீப்ரு மொழியிலும், மொழிபெயர்க்கப்பட்டுள்ளதால், அது நம் காலத்தின் பொதுமை நோக்குக்குச் சிறந்த சான்ருகும்.

எராஸ்மஸின் மற்ற நூல்களில் பலவற்றிற்கும் இதே விமர்சனம் பொருந்தும். அவற்றில் முக்கியமானவை: கிறிஸ்துவ சமயத்தின் ஆன்ம, இறையியல் பிரச்னைகள் பற்றி அவர் எழுதிய நூல்கள். விவிலியம், திருச்சபை ஞானகுருக்களின் நூல்கள் ஆகியவற்றின் மொழியாக்கங்களும் உரைகளும் ஆகும்.

விவிலியப் புது ஏற்பாட்டிற்கு எராஸ்மஸ் தந்துள்ள விளக்கங்கள், துறவற வாழ்க்கை பற்றிய அவர் நையாண்டிச் சித்திரங்கள், திருச்சபையில் அவ்வப்போது நேரிட்ட ஒழுக்கக் கேடுகளையும் ஊழல்களையும் அவர் அம்பலப்படுத்தியது ஆகியவற்ருல் அவரைப் பற்றி இதுவரை, ஏன், இன்றும்கூட, தவருன, பொருத்தமற்ற கருத்துக்கள் பரவியுள்ளன என்பது உண்மைதான். திறனாய்வுத் தெளிவு இல்லாதவர்கள் எராஸ்மஸைத் தாக்கியுள்ளனர். அவர் வாழ்நாளில் அவர் ஆதரவைப் பெற்றிருக்க முடியாத சமயப் பிரிவுகள், குழுக்கள் ஆகியவற்றின் ஆதரவாளராக, அவரைக் கருதி, அவருக்குக் களங்கம் உண்டாக்கியுள்ளனர்.

வரலாற்றுப் பின்னணியில், வாய்மையை நாடும் ஆர்வத்தைத் தவிர, வேறெந்தக் கொள்கை வெறியும் இல்லாமல், எராஸ்மஸ் நூல்களைப் படிப்பவர் யாரும், —அவர் கிறிஸ்துவ சமயத்தைச் சேர்ந்தவராயினும் சரி, அச்சமயத்தைச் சேராதவராயினும்சரி —(கிறிஸ்துவரல்லாத வாசகரை நோக்கித்தான் நான் குறிப்பாகச் சொல்கிறேன்), அவருடைய ஆழ்ந்த உறுதியான சமய நம்பிக்கையாலும், பண்டையக் கிறிஸ்துவ மரபிடம் அவர் கொண்டிருந்த விசுவாசத்தாலும், கிறிஸ்துவின் போதனையில் அவருடைய ஆழ்ந்த ஈடுபாட்டினுலும், கவரப்படுவது உறுதி. அது மட்டுமல்ல; தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பொறுப்புணர்வு வேண்டுமென்று அவர் வலியுறுத்தியதையும் அவர்கள் உணர்வார்கள். ‘வழிகாட்டி’ என்ற தலைப்பில் அவர் எழுதிய பக்திநெறி நூலில் இப் பொறுப்புணர்வைத் தான் கிறிஸ்துவ சமயத் தொண்டர்களிடையே புகுத்த எராஸ்மஸ் முயன்ருர். இந்நூலின் கிரேக்க தலைப்புக்கு இரு பொருள்கள் உண்டு; ‘கையேட்டு நூல்’ என்று ஒரு பொருள். ‘கைக்கருவி’ என்பது மற்ருெரு பொருள். மனமயக்கங்களிலிருந்து தன்னைக் காக்க, மனிதன் தன்னுடன் தூக்கிச் செல்லக் கூடிய கருவி என்பதைக் குறிக்கவே, எராஸ்மஸ் இத் தலைப்பைச் சூட்டியிருக்க வேண்டும்.

தம் இளம் பருவத்திலிருந்தே, எராஸ்மஸ், ‘புதுப் பக்திப் பரம்பரையில் ஊறியிருந்தார். பல தெய்வங்களைப் போற்றிய பண்டைப் பரம்பரையின் விவேகமும் அறிவு விளக்கமும், திரு ஆகமங்களின் போதனைகளும், கொண்ட சேர்க்கையில் உருவானது இந்த ‘புதுப்பக்தி’. ஆன்மீக மனிதனுக்கும் பூதவுடல் மனிதனுக்குமிடையே பிளவு கிடையாது என்ற அனுபூதித் தத்துவ நம்பிக்கையில் பிறந்தது இக் கருத்து. ஆக்ஸ்போர்டில் தம் நண்பர் காலெட்டிடமிருந்தும், பிரான்சில் அர்ச். ஓமர் ஊரில் தாம் அடிக்கடி சந்தித்த, தம் மதிப்புக்கும் பாராட்டுக்குமுரிய, பிரான்சிங்கன் துறவி ஜீன் விட்ரியரிடமிருந்தும் தாம் கற்ற பரிசுத்த பவுலின் போதனைகளின் சாரத்தையும் சிறந்த அம்சங்களையும், எராஸ்மஸ் தம் நூல்களில் சிறந்தவற்றில் திரட்டி அளித்தார்.

இந்த வழிகாட்டி நூலின் இருபத்திரண்டு விதிகளிலிருந்தோ, இந்நூலைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட இறையியல் நுட்பத் தத்துவ ஆராய்ச்சி உரைகளிலிருந்தோ, கிறிஸ்துவ சமயம் பற்றி அவர் கொண்டிருந்த கோட்பாடு, முக்கியமாக அறக் கோட்பாடு என்ருே, திருமறைப் புனிதச் சூளுரை பற்றி அவர் பொருட்படுத்தவில்லை என்ருே, முடிவு செய்வது பெருந்தவருகும். அவருடைய கத்தோலிக்க உணர்வு, உலகப் பொதுமை நோக்குக் கொண்டது என்பதை, எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம். (ஒரு வகையில் பார்த்தால், கத்தோலிக்க நெறி, பொதுமை நெறி, என்ற இரண்டு சொற்ருெடர்களும் ஒரே பொருள் கொண்டவை. வேருெரு வகையில், அவை இரண்டும் வேறுபட்டவை) இந்த அடிப்படையில் நான் வலியுறுத்த விரும்புவது, எராஸ்மஸின் இறையியல் கோட்பாடுகளில், கொள்கை வெறி சிறிதுமில்லை என்பது தான். லோவெயின், பாரிஸ், டோலெடோ ஆகிய ஊர்களிலிருந்



மடமை: “மடமையின் புகழ்மிகு தொண்டர்களே, நலமாக வாழுங்கள், குடித்து மகிழுங்கள்”.

“…கவிஞர்களின் கருத்துப்படி அட்லஸ் தனது தோளில் வானுலகைத் தாங்குவது போல்”.

“சிந்தனையின்றிப் பேசுவதையே சிறந்ததெனக் கருதுகிறேன்”.



Photos Netherlands Ministry of Education and Science

தும், இன்னும் பலவிடங்களிலிருந்தும், வந்த இறையியல் அறிஞர் பட்டாளம், அவருக்கு எதிராக நடத்திய கடுமையான போராட்டமே, இதற்குச் சான்ருகும்.

''சமாதானமும் ஒற்றுமையும் தான் நம் சமயத்தின் அடிப்படை'', என்று பலர் மோவின் ஆர்ச்பிஷப்பான ஜீன் கரன்டெலட்டுக்கு எழுதிய புகழ்பெற்ற கடிதமொன்றில் எராஸ்மஸ் குறிப்பிட்டார். அந்த சமாதானமும் ஒற்றுமையும் கிறிஸ்துவர்களிடையே மட்டுமல்ல, கிறிஸ்துவர்களுக்கும் துருக்கியருக்கும் இடையிலும், நிலவ வேண்டுமென்று அவர் விரும்பினர். துருக்கியர் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்ட வேளையில், கிறிஸ்துவர் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொலை செய்ததுடன், அந்த வெறியாட்டத்திற்கு நியாயம் காட்டச் சமய உணர்வை இழுத்ததையும் கண்டு, அவர் மனம் நொந்தார்.

ஆன்மீகப் போர்வீரரும் சமாதானத்தின் காவலருமான எராஸ்மஸ், மனிதரையும் நாடுகளையும் ஒன்ருேடொன்று மோதவிட்ட சகியாத் தன்மையும் காட்டுமிராண்டிப் போக்கும் பயங்கரமானவை, கொடுமையானவை என்று நம்பினர். பியர் கிரோஸ்கிலாட் அண்மையில் எடுத்துக் காட்டியதுபோல், 'ஐக்கிய ஐரோப்பா' விற்கு எராஸ்மஸ் முன்னேடியாய் விளங்கினர். பல்வேறு கிறிஸ்துவத் திருச்சபைகளும், ஒன்ருய் இணையாவிடினும், ஒத்துப் போகவாவது கற்க வேண்டுமென்பதை அவர் தீவிரமாக வலியுறுத்தியிருப்பார். இன்று தலை விரித்தாடும், இன, தேசிய, வெறியாட்டம், அவருக்கு அதிர்ச்சியும் வேதனையும் அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. தம் நூல்களில் இதை அவர் பலமுறை தெளிவுபடுத்தினர். 'சமாதானப் புகார்' என்ற நூலிலும், ''போரை அறியாதவர்க்குத் தான் போர் இனிக்கும்'' என்ற கூற்றிலும்

(தொடர்ச்சி 34ஆம் பக்கம் பார்க்க)



IOANNES
FROBENIVS STVDIOSIS
OMNIBVS S. D.

Accipito candide lector ERASMI ROTERODAMI, prouerbiorum Chiliadas, iam tertiũ ab ipso non æstimandis sudoribus recognitas, & ex probatissimis autoribus sic locupletatas, ut cui superioris æditionis summæ, ferme quarta pars ab hinc bienniũ accesserat, huic nunc haud multo minus sit adiectũ. Nos neq; sumptui, neq; labori pepercimus, ut tam eruditũ opus, tam copiosum, ut uere flumẽ aureũ uocare possis, q̃ emendatissimũ e nostra officina prodiret in lucẽ, plane nouum, & hactenus à nemine excusũ. Eme, fruere, & Vale.

IN INCLYTA GERMANIAE BASILEA.

மடமைக்கு....உலகமே நாடக மேடை

1509இல் எராஸ்மஸ் இத்தாலியை விட்டு இங்கிலாந்து சென்ருர். ஆல்ப்ஸ் கணவாய்களின் வழியே செல்லும்போது, மனிதனின் மடமையையும் குறைகளையும் வெளிப்படுத்தும் 'மடமையின் மகிமை' எனும் அங்கதத்தின் கருத்து உள்ளத்தில் உதித்தது. அதுவே பெரும் வாதத்தைத் தொடங்கிய 'தற்கால' நூலாக அமைந்தது. ஹால்பெய்ன் அதன் முதல் பதிப்பின் ஓரத்தில் சிறு படங்களை வரைந்தபோது அவருக்கு 18 வயது. அவர் எராஸ்மஸை மகிழச் செய்ய வரைந்த படங்கள் புகழ் பெற்று அந்நூலின் பல பதிப்புகளில் இடம் பெற்றன. வலப்புறம்: அக்கால ஆசிரியர்களையும் மாணவரின் அவல நிலையையும் விளக்க ஹால்பெய்ன் 'மடமைக்'கென வரைந்த படம். "அவர்கள் சிறுவர்களை 'கோல், சாட்டை, பிரம்புகளால் அடித்தனர்". மேலே: 1515இல் பேஸலில் வெளியான எராஸ்மஸின் 'அடாஜியா' விற்காக ஹால்பெய்ன் தீட்டிய படம். சாலமனுடன் (உச்சியில் நடுவில்) 21 பண்டைய தத்துவ அறிஞரும் எழுத்தாளரும்.

Photo © Realites- J.P. Charbonnier

ஆசியாவின் நடுவில் மங்கோலியா இருப்பதை இடப்புறப் படம் காட்டுகிறது. கீழே: 2·3 கோடி ஆடு மாடுகள் மேயும் பரந்த வியப் புல் வெளிகளில் ஆயன் ஆடுகளைக் குதிரை மேலிருந்து பாதுகாக்கிறார். எதிர்ப்புறம்: மங்கோலியாவின் வளர்ந்து தலைநகராகிய ஊலன் பாட்டரின் உயர் கட்டிடங்களின் ஊடே மாணவக் குழந்தைகள் உலாவச் செல்லுகின்றனர்.

மங்கோலியா

ஐ. நா. யுனெஸ்கோ போன்ற அதன் தனிச் செயல் நிறுவனங்கள் ஆகியவற்றின் வல்லுநர்களடங்கிய ஐ. நா. வளர்ச்சித் திட்டக்குழு இவ்வாண்டு மங்கோலியக் குடியரசின் தொழில் நுணுக்க, விஞ்ஞான, கல்வி, சமூக வளர்ச்சி பற்றி ஆராய அங்கு சென்றது. அவ்வல்லுநர் இருவர் மங்கோலியா பற்றி ''யுனெஸ்கோ கூரியர்''க்கென எழுதிய கட்டுரையைக் கீழே தருகிறோம். (இப்போது நிகழ்ந்து வரும் ஐ. நா. வளர்ச்சித் திட்ட விவரங்களை 20ஆம் பக்கத்தில் காணலாம்.)

கான்ராட் ஃபாக்நிட்ஸ்,
லெவ் கோஸ்டிகாவ்

Photo © Eric Schwab

ஆசியாவின் மத்திய பாகத்தில் கோபிப் பாலைவனத்திற்கும் பைக்கால் ஏரிக்கும் நடுவே அமைந்திருக்கின்ற காரணத்தால், மங்கோலியா எப்பொழுதுமே கண்காணாத இடத்தில் மூடுமந்திரமாகவே இருந்து வந்துள்ளது. இன்றுகூட அந்த நாட்டைப் பற்றியும் அங்குள்ள மக்கள் பற்றியும் அவர்கள் வாழ்க்கை முறை பற்றியும் பெரும்பாலானவருக்கு ஒன்றும் தெரியாது.

உதாரணமாக மங்கோலியக் குடியரசு பிரெஞ்சு நாட்டைப்போல ஐந்து மடங்கு விஸ்தீரணம் உடையதென்பதும் அதனுடைய ஜனத்தொகை 12¼ லட்சம்தான் என்பதும் அதாவது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு ஒரு ஆள் வீதமே இருக்கின்றார்கள் என்பதும் ஒரு சிலரே அறிந்த உண்மைகள். பரந்து கிடக்கின்ற மங்கோலியாவின் வெளிப் பிரதேசங்கள், ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பண்படுத்தப்படாத மேற்குப் பகுதிகளையும் சோவியத் நாட்டின் காசகிஸ்தானின் பரந்த நிலப் பரப்பையும் நினைவூட்டுவனவாக உள்ளன. இப் பிரதேசங்களின் பொதுத்தன்மை என்னவெனில், ஆடு மாடு மேய்ப்பவர்கள் குதிரையின் மேல் அமர்ந்து செல்வதாகும். மேலும் காசகிஸ்தான், ஐக்கிய அமெரிக்காவின் மேற்குப் பகுதி இவற்றைப் போலவே மங்கோலியாவிலும் கனி வளம், நிலக்கரி, எண்ணெய், தங்கம் இன்னும் நவரத்தினக் கற்கள் ஆகியவை நிறைந்துள்ளன.

கான்ராட் ஃபாக்நிட்ஸ்: தொழில், சமூக உளவியல் அறிஞரான இந்த அமெரிக்கர் 1966இலிருந்து வாழ்க்கைத் தொழில் பயிற்சி வல்லுநராகப் பன்னாட்டுத் தொழில் நிறுவனத்தில் பணியாற்றி வந்துள்ளார். அதற்கு முன் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் எஃகு தொழில் துறையின் பயிற்சி அறிவுரையாளராக இருந்தார்.

லெவ் கோஸ்டிகாவ்: வளர்ச்சிக்கென அறிவியலைப் பயன்படுத்தும் யுனெஸ்கோ துறையின் அலுவலர். 1967 வரை அவர் வெப்ப விசையியல் இணைப் பேராசிரியராகவும், விசையாற்றல் பொறியியல்துறைத் தலைவராகவும், மாஸ்கோ பாமன் உயர் தொழில் நுணுக்க நிலையத்தில் தொழில் ஆய்வுத் தலைவராகவும் பணியாற்றினார். அந்நிலையத்தில் அவர் வெப்பம், வெப்பம் ஓரகத் தனிமங்கள் பற்றி ஆய்வுகள் நடத்தினார்.

Photo © John Massey Stewart, London

முன்னேறிச் செல்லும் மக்கள்

ஐக்கிய அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியைப் போலவே மங்கோலியாவும் வறண்டப் பிரதேசமாகும். என்றாலும் ஒப்புமைத்தன்மை இதனுடன் நின்று விடுகிறது. மங்கோலியாவைப் பொறுத்தமட்டில் மிகக் குறைந்த வெப்ப அளவுள்ள நல்ல சூரிய உஷ்ணமுடைய பிரதேசமாக இருக்கிறது. சூரியன் காயும்போது— 35° இருப்பதும், கோடைக் காலத்தில் 40° வரையில் உஷ்ணம் ஏறுவதும் மிகச் சாதாரண விஷயங்கள் ஆகும்.

மிகப் பழங் காலத்திய மங்கோலியத் தலைவனாகிய செங்கிஸ்கானைப்பற்றியும், அவனுடைய வலிமை மிகுந்த வீரர்கள் பற்றியும், அவர்கள் சீனா, துருக்கிஸ்தான், தெற்கு ரஷ்யா ஆகிய பகுதிகளைச் சூறாவளிப்போல் வென்றதையும் நாம் அனைவரும் அறிவோம். இன்றைய மங்கோலிய மக்களும் அமைதியான முறையில் ஆடுமாடு மேய்த்து வாழ்கிறார்கள் என்றே கருதிக் கொணடிருக்கிறோம. ஆனால், தொழில் துறை வளர்ச்சியில், கூட்டுப் பண்ணை முறையில், கல்வித் துறையில் மங்கோலியா எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்பதை நம்மில் சிலரே அறிவோம். நாடோடி மக்கள் வாழ்ந்த அந்த மங்கோலியா அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதாரத்தையும், சமுதாய வாழ்க்கையையும் அதிகம் பாதிக்கக்கூடிய முறையில் பெரிதும் முன்னேறி உள்ளது.

அன்றாடம் பல்வேறு பருவங்களிலும் பெரிதும் மாறுபடுகின்ற மங்கோலியாவைப் போன்ற சீதோஷ்ண நிலையில் மக்கள் நிலைத்து வாழ்வது என்றால் அவர்கள் மிகமிக வலுப் படைத்தவர்களாக இருத்தல் வேண்டும்.

குதிரையேற்றத்தில் அவர்கள் மிகச் சிறந்தவர்கள். குதிரைப் பந்தயம் என்பது மங்கோலியாவின் தேசிய விளையாட்டாகும். ஐந்து முதல் பன்னிரண்டு வயது வரையிலுள்ள இளஞ் சிறார்கள்கூட இப் பந்தயங்களில் ஈடுபட்டுக் கண்மண் தெரியாத வேகத்தில் 40 கிலோ மீட்டர் வரை பந்தயம் செலுத்துகின்ற பழக்கம் உண்டு. எனவே இச்சிறார்கள் வரும்பொழுது குதிரையேற்றத்திலும் மிகவும் தெளிந்துவிடுகிறார்கள். சென்ற பல நூற்றாண்டுகளில் நாடோடிகளாக இருந்த இவர்கள் தங்களுடைய ஆடுமாடுகள், செம்மறியாடுகள், குதிரைகள் ஆகியவற்றுடன் பரந்த புல்வெளியில் சுற்றித் திரிந்த காரணத்தால், குதிரைக்கும் மனிதனுக்குமுள்ள உறவு வலுப்பட்டுவிட்டது.

இந்த நாடோடி வழக்கம் காரணமாக நகர்ந்து செல்லும் வீடுகளில் வசிக்க வேண்டிய தேவை ஏற்பட்டு, அதிகம் மாறுபடுகின்ற சீதோஷ்ண நிலைக் கேற்பவே அந்த வீடுகளும் அமைந்தன. இதற்கேற்ற முறையில் ''யூர்த்தா'' என்று சொல்லப்படும் கூடாரங்கள் 20 அடி குறுக்களவு உள்ளதும், தலை வெட்டப்பட்ட கூம்பு வடிவத்திலும் அமைக்கப்பட்டன. இத் தலைப் பகுதியில் அடுப்பின் புகைப்போக்கி அமைக்கப்பட்டதுடன் கதவுகள் தெற்கு நோக்கியே அமைக்கப் பெற்றன.

மனிதனுடைய அறிவுத் திறத்திற்கும் செய்முறை சக்திக்கும் சிறந்த ஓர் எடுத்துக் காட்டாய் இக் கூடாரங்கள் அமைந்தன. கெட்டியானக் கம்பளிகளை மரச் சட்டங்களின் மேல் விரித்து தடுப்புகள் ஏற்பாடு செய்தனர். கூடாரம், தடுப்புகள், கதவுகள் ஆகிய அனைத்துமே அரை மணி நேரத்தில் கட்டவும் பிரிக்கவும் தகுதியுடையனவாக இருந்தன. இத்தகைய ''யூர்த்தா'' என்ற கூடாரமும், வியத்தகு முறையில் ஓடுகின்ற மங்கோலிய குதிரைகளுமே ஏழு நூற்றாண்டுகளின் முன்னர் செங்கிஸ்கான் மிக விரைவாக முன்னேறுவதற்கும் பகைவர்களை வெல்வதற்கும் வாய்ப்பளித்தன.

சீதோஷ்ணத்தைப் பொறுத்தே வாழ்க்கை நடத்த வேண்டிய கடப்பாடுடைய பல்வேறு மக்களையும் போல மங்கோலியர்களும் அடிக்கடித் தங்கள் நாட்டின் சீதோஷ்ணத்தைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது முதல் 10 அல்லது 15 நிமிஷங்களுக்கு சமீபத்தில் பெய்த மழைபற்றியும், புல்வெளிக்கும் மாட்டுத் தொழுவுக்கும் அம் மழையால் ஏற்பட்ட பயன்பற்றியும் பேசுவார்கள். பசிபிக் சமுத்திரத்திலிருந்து அடிக்கின்ற பருவக் காற்றுகள் மங்கோலியாவின் உயர்ந்த மலைப் பிரதேசங்களால் தடுக்கப்படுதலின் மங்கோலியாவில் மழையோ பனிக்கட்



Photo © J. Kosidowski, Warsaw

Photo © John Massey Stewart, London

குதிரை வீரர் இனம்

நீண்ட கால நாடோடி வாழ்க்கை மங்கோலியரைக் குதிரை வீரராக்கியது. அவர்கள் முரட்டுக் குதிரைகளின் மேல் அமர்ந்து (மேலே) புல்வெளிகளில் விரைந்து செல்ல விழைகின்றனர். குழந்தைகள் இளம் பருவத்திலே சவாரி செய்யக் கற்றுக் கொள்கின்றனர். (இடப்புறம்) எதிர்ப்புறம்: நூற்றுண்டுகளாகக் குதிரைச் சவாரி செய்து வந்த மங்கோலியர் இப்போது மோட்டார் சைக்கிள் வாங்க விரும்புகின்றனர். ஊலன் பாட்டா அருகிலுள்ள இக்கூட்டுப் பண்ணையில் மங்கோலியரின் மரபான நாடோடி வீடுகளைப் பின்னணியில் காணலாம்.

டியோ மிகமிகக் குறைவாகும். ஆண்டு முழுவதற்கும் 300 மில்லி மீட்டர் அளவே மழை பெய்கிறது.

இருவர் சந்திக்கும்பொழுது அந்தந்தப் பருவத்திற்கேற்ப கோடைக் கால மழைபற்றியோ, குளிர்காலக் காற்றைப் பற்றியோ, இலையுதிர் கால வாடைபற்றியோ, வசந்த கால அழகுபற்றியோ பேசிக்கொள்வார்கள். இந்த உரையாடல் அனைத்திலுமே மாட்டுத் தொழுவுக்கு சீதோஷ்ணத்தால் ஏற்படுகின்ற பயன்பற்றிய ஒரு பொதுப் பேச்சு இருந்துதீரும்.

உலகத்தின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத முறையில் மங்கோலியாவின் பொருளாதாரம் முழுவதும் கால்நடைகளைப் பொறுத்தே அமைந்திருக்கின்றன. மங்கோலியாவில் 230,00,000 கால்நடைகள் உள்ளன அதாவது தலைக்கு 20 கால்நடை வீதம் அமைந்துள்ளன. 'அராத்துகள்' என வழங்கப்படும் கால்நடை மேய்ப்போர் தம் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்திற்கும் கால்நடைகளின் பயனையே நம்பியிருக்கின்றூர்கள். சமீப காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுவதற்கு முன்னர் 2,00,000 குடும்பங்கள் தங்கள் கால்நடைகளிலிருந்து கிடைக்கும் மிகக் குறைந்த ஊதியத்தை நம்பியே வாழ்க்கை நடத்தினர்.

1921 வரையில் மங்கோலியாவில் நிலைபெற்றிருந்த நிலச்சுவான்தார் சட்டப்படி நிலம் முழுவதும் பரம்பரையாக சிற்றரசர்களிடமே இருந்து வந்தது. நாடோடிகள் அதிலுள்ள புல்லைப் பயன்படுத்துவதற்காக வரி செலுத்தி வந்தனர். மிகச் சிறந்த புல்வெளிகள் அரசர்களுடைய கால்நடைகளுக்குப் பயன்பட்டன என்றும் நாடோடிக் குடும்பங்களுக்கு மிகக் குறைந்த சத்தற்ற புல்வெளிகளே வாடகைக்குக் கிடைத்தன என்றும் சொல்லத் தேவையில்லை. அதே நேரத்தில் புத்த சமயத்தின் ஒரு கிளையாகிய லாமா சமயம் அதிகார பூர்வமான சமயமாக மங்கோலியாவில் நிலைப்பெற்றது. 20ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் மங்கோலியாவில் 700 மடங்களும் 1,00,000 லாமாக்களும் இருந்தனர். சிற்றரசர்களுக்குக் கட்டிய வரியும் லாமாக்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் முயற்சியும் இந்த நாடோடிக் குடும்

Photos © John Massey Stewart, London

ஸ்டெப்பியிலிருந்து இக்காலத்திற்கு

அரசுப் பண்ணைகளும் 300 கூட்டுறவு சங்கங்களும் மங்கோலிய விவசாயத்தை விரைவில் மாற்றி வருகின்றன. நாட்டில் 60 சத விகிதம் பேர் பயிர்த்தொழில் செய்கின்றனர். ஆயினும் 2,60,000 பேர் அல்லது மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் தலைநகரான ஊலன் பாட்டரில் வாழ்கின்றனர், அங்கு பெரும் பல்கலைக் கழகம் (4000 மாணவர்கள்), கல்லூரி தொழில் நுணுக்க நிலையங்கள், அரங்குகள், நூலகங்கள் உள்ளன. 50 ஆண்டுகளுக்கு முன் இல்லாத தொழில்துறை இன்று நாட்டின் மொத்த ஆக்கத்தில் 40 சத விகிதத்தை உற்பத்தி செய்கின்றது.

Photo © Jan Kosidowski, Warsaw

வில்லாண்மையை இன்னும் மங்கோலியர் விரும்புகின்றனர்.

Photos © Réalités-J.-P. Charbonnier

வலப்புறம் உழவர்கள்
கும் மரபான கூடாரம்.
அல்லது கலைக்கலாம்.
பரந்த வெளிகளில்
(மேலே). கீழே, கிராம
கோலியப் பெண், மங்
பொருள்கள் 80 சதவி



ரச்சட்டத்தில் இழுத்துக் கட்டியமைக்
தை 30 நிமிடங்களில் அமைக்கலாம்
இவ்வியங்கும் நாடோடி வீடுகளைப்
னும் ஆயர்கள் அமைக்கின்றனர்
பொருளாதார ஆய்வுக்கூடத்தில் மங்
கோலியாவின் ஏற்றுமதியில் பண்ணைப்
மாகும்.

Photo © Eric Schwab





Photo © Magnum - René Burri

புவியியல் நூல்கள் கூறும் பின்தங்கிய நாடன்று

பங்களுக்கு பெருஞ் சுமையாக அமைந்துவிட்டன.

மிகமிகச் சில மங்கோலியர்களே குடியானவர்களாக விரும்பினர். ஏனென்ருல், பண்ணை வைக்கும் குடியானவர்கள் அரசர்களிடத்தில் பண்ணை அடிமையாக வேண்டிய சூழ்நிலை இருந்தது. பெரும்பான்மையான மக்கள் தங்களுடைய குடும்பம், கூடாரம், மாட்டுத்தொழு ஆகியவற்றுடன் பரந்த புல்வெளியில் சுற்றித் திரிந்து இந்த வரி பளுக்களிடையே எப்படியோ உயிர் வாழ்ந்துவந்தனர்.

மிகச் சமீபக் காலத்தில்தான் பயிரிடும் பண்ணைகளும் கால்நடைப் பராமரிப்பும் நவீன முறையில் மங்கோலியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1921இல் ஏற்பட்ட புரட்சி சிற்றரசர்களையும் லாமாக்களையும் ஒழித்து நிலங்களை மக்களுக்கு வழங்கிற்று. அதிலிருந்து வரிப் பளு இல்லையாதலால் ''அராத்துகள்'' ஓரிடத்தில் தங்கிப் பண்ணை வைக்கத் தொடங்கினர்.

இதனல் வியக்கத்தகுந்த ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது. 1921 வரையில் குடியானவர்கள் என்று சொல்லத் தக்கவர்களே இல்லாமையால், தன்னுடைய தேவை, தானியம் அனைத்தையும் இறக்குமதி செய்ய ஒரு நாடு, இன்று தன் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதுடன் உற்பத்தியாகும் கோதுமையை ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு வளர்ந்துள்ளது. இதற்குரிய பெருமையில் பெரும் பங்கு அரசாங்கப் பண்ணைகளுக்கும் கால்நடை வளர்க்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சென்று சேரும்.

மங்கோலியாவிலுள்ள ஆள் பலத்தில் 60 சதவீதம் நாட்டின் மிக முக்கியமான பொருளாதாரமாகிய விவசாயத்தில் சென்று சேருகிறது. மங்கோலியாவின் தேசிய மொத்த வருமானத்தில் 60 சதவீதம் விவசாயத்திலிருந்தே கிடைக்கிறது. அந் நாட்டின் ஏற்றுமதியில் 80 சதவீதம் விவசாயப் பொருள்களேயாகும். இன்னும் பல ஆண்டுகளுக்கு மங்கோலியாவின் பொருளாதார அடிப்படை விவசாயத்திலேயே நிற்குமாதலால் சிறந்த முறையில் கால்நடைகளைத் தேர்ந்து அவற்றை வளர்ப்பதற்குரிய முறைகளில் அதிக கவனம் செலுத்தப்படுவதோடு மாட்டுத் தீவன உற்பத்திப் பெருக்கத்திலும் கால்நடைகள் தங்குவதற்குரிய பாதுகாவலான இடங்களைப் பெரிதாக்குவதற்குரிய முயற்சிகளும் நடைபெறுகின்றன.

பல்வேறு குடும்பங்கள் ஒன்ருகச் சேர்ந்து கூட்டுறவு முறையில் வாழத் தொடங்கியுள்ளமையின் பழைய நாடோடி வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. இந்தக் கூட்டுறவுத் துறைகள் தனி மனித உடைமைக்கும் சமுதாயக் கூட்டு முயற்சிக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். ஒவ்வொரு மனிதனும் குறிப்பிட்ட அளவுள்ள கால்நடைகளைத்தான் சொந்தத்தில் வைத்திருக்கலாம். சராசரியாக கூட்டுறவு முறையில் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கின்ற ஆஸ்திகள் ஏறத்தாழ 18 சதவீதமாகும்.

1967இல் கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 281 இருந்தன. ஒவ்வொரு சங்கத்திலும் 500 குடும்பங்கள் அங்கம் வகித்தன. கூட்டுறவுகள் அளவால் மாறுபட்டன என்ருலும் பெரும்பான்மையானவை 3,00,000 ஹேக்டர் (7,50,000 ஏக்கர்) பரப்பளவுடையன. அவற்றில் 50 முதல் 70 ஆயிரம் கால்நடைகள் இருந்தன. கூட்டுறவு முறை வளர்ச்சி கால்நடைகளின் பெருக்கத்திற்கும் சிறந்த முறையில் கால்நடை உற்பத்தி செய்வதற்கும் தனிப்பட்ட 'அராத்துகள்' மறுபடியும் நாடோடியாக போகாமல் இருப்பதற்கும் உதவின.

மங்கோலியாவில் தேசியப் பண்ணைகள் என்று சொல்லப்படும் கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுகள் மிகமிக அதிகமாக வளர்ந்துள்ளன. 1940இல் 10 தேசியப் பண்ணைகளே இருந்தன. ஆனல், இன்று ஒவ்வொன்றும் இலட்சம் ஹேக்டர் பரப்பளவுள்ள 31 பண்ணைகள் இருக்கின்றன. பெரும்பாலும் இயந்திர சாதனத்தின் மூலம் விவசாயம் நடைபெறுவதால் ஒருசில குடும்பங்களே அதில் பணிபுரிகின்றன. உழுதல், விதைத்தல், அறுவடை செய்தல் அனைத்துமே இயந்திரங்களின் மூலம் நடைபெறுவதால் ஒரு சில பணியாளர்களே தேவைப்படுகின்றனர். பெரும்பாலான மனித

மங்கோலியாவில் ஐ. நா.வும் அதன் தனிச் செயல் நிறுவனங்களும்

ஐ. நா. வளர்ச்சித் திட்டம் (UNDP) மங்கோலியக் குடியரசின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கெனத் தனது தனி நிதியிலிருந்து பல திட்டங்களுக்கு செலவு செய்து வருகின்றது. கீழ்க் கண்ட திட்டங்களில் யுனெஸ்கோவும் ஐ. நா. தனிச் செயல் நிறுவனங்களும் பங்கு பெறுகின்றன.

பொறியாளர் பயிற்சி :

வளரும் மங்கோலியத் தொழில் துறைக்குத் தேவையான பொறியாளரைப் பயிற்றுவிக்க 1968இல் தொழில் நுணுக்கப் பள்ளி தொடங்கப்பட்டது. யுனெஸ்கோ வல்லுநரின் மேற்பார்வையில் இஃது இயங்கி வருகின்றது. அதன் ஆறு பகுதிகளில் 1000 மாணவர் படிக்கின்றனர். யுனெஸ்கோ திட்டப்படி அயல்நாடுகளில் படிக்கும் மாணவர்கள் நாடு திரும்பியதும் யுனெஸ்கோ வல்லுநர் வெளியேறுவர், கல்வி வளர்ச்சிக்காக இத் தொழில் நுணுக்கப்பள்ளி, ஆய்வுத் திட்டங்களை வலியுறுத்தி வருகின்றது.

தொழில் நுட்பப் பயிற்சி :

பயிற்சி முறை, ஆலைகளில் பயிற்சி, மின் தொழில் நுட்பம், மரவேலை, உறை பதன முறை, இயந்திரப் பட்டறைத் தொழில், சுரங்கக் கருவிப் பாதுகாப்பு, கிணறு தோண்டுதல், மண் துளைத்தல், மணிகளை வெட்டி மெருகேற்றுதல் ஆகியவற்றிற்கென 4 ஆண்டுப் பயிற்சித் திட்டத்தை 1969இல் பன்னுட்டுத் தொழில் நிறுவனம் தொடங்கியது.

நீரியல், வானிலை ஆய்வு மணிகள்

உலக வானிலை ஆய்வு நிறுவன வல்லுநர்கள் நீரியல் வானிலை ஆய்வு நிலையங்களை அமைப்பதில் மங்கோலிய அரசுக்கு அறிவுரை கூறி, புதிய நீரியல், பயிரியல் நிலையங்களுக்கேற்ற இடங்களையும் தெரிந்தெடுத்தனர். பல வானெலி நிலையங்கள் கட்டப்படுவதுடன், அயல்நாட்டுப் படிப்பிற்கு வழியும் வகுக்கப்படுகின்றது

தோல் தொழிலுக்குச் சிறப்பிடம்

உணவுப் பயிர்த்தொழில் நிறுவனம் கால்நடை பேணும் வாய்ப்புகளையும் பயிற்சி முறைகளையும் வளர்த்துள்ளது. இவ்வாண்டு 3 இடங்களில் பயிற்சி தொடங்கியது. ஒவ்வொன்றும் வெவ்வேறு தட்பவெப்ப நிலைக்கும் கால்நடைகளுக்கு அமைந்துள்ளது.

ஐ. நா. தொழில் வளர்ச்சி நிறுவனர்கள் மங்கோலியத் தோல் தொழிலைப் பார்வையிட்டனர். ஏற்றுமதியை வளர்க்கும் நோக்குடன் தோல் உற்பத்தியையும் தரத்தையும் உயர்த்துவதற்காக ஆய்வுக்கூடம் அமைக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் முதலிடம் அளித்துள்ளது. இதை ஜனவரி 1970இல் ஐ. நா. வளர்ச்சித் திட்ட ஆட்சி அவை ஆயும்.

தேசிய கணக்குப் பொறி நிலையம் அமைத்தல், மங்கோலிய நாட்டின் மொத்த ஆக்கத்தில் பாதி தரும் கால்நடையையும் பால் பண்ணையையும் பெருக்குதல், கால்நடை நோய் தடுக்கும் அம்மைப்பால் உற்பத்தித் திட்டம், உணவுப் பதன ஆய்வு நிலையம் நிறுவுதல் ஆகியவை பிற திட்டங்களாகும்.



Photo © Eric Schwab

புல் வெளியில் புத்தர்

தனித்த புல்வெளியில் நிற்கும் இச்சிலை, புத்த சமய வகையாகிய லாமா கொள்கை நீண்ட காலமாக மங்கோலியாவின் மதமாக நிலவி வந்ததெனக் காட்டுகிறது. 8ஆம் நூற்றுண்டில் அது திபெத்திலிருந்து மத்திய ஆசியாவில் காக்கஸஸ் வரை பரவியது. கடந்த நூற்றுண்டில்கூட மங்கோலியாவில் 700 மடாலயங்கள் இருந்தன ; 100,000 லாமாக்கள் இருந்தனர்.

களின் உழைப்பினுல் நடைபெறக் கூடிய வைக்கோல் தயாரிப்புக்கூட மங்கோலியாவின் தேசியப் பண்ணைகளில் 97 சதவீதம் இயந்திரங்களினுலே செய்யப்படுகின்றது.

மங்கோலியாவின் மிகக் குறைவான ஜனத்தொகை காரணமாக வேளாண்மையை இயந்திரத்தின் மூலம் செய்ய வேண்டியது மிகமிக அவசியமாகிறது. மக்கள் தொகை குறைவும் தொழிற்சாலைகளின் தோற்றமும் ஆசியாவில் இல்லாத முறையில் ஒரு புதிய பிரச்னையை மங்கோலியாவில் உண்டாக்கியிருக்கிறது. மங்கோலியாவின் பொருளாதாரத் திடீர் முன்னேற்றத்தை வளர்த்துக் கொண்டே செல்ல வேண்டுமேயானுல் மிக அதிகமான மக்கள் தேவைப்படுவார்கள்.

அரசாங்கப் பண்ணைகளிலும் கூட்டுறவு நிறுவனங்களிலும் பழைய காலத்தில் நாடோடிகளாக இருந்த பொழுது இருந்ததைவிட வாழ்க்கைத்தரம் மிகவும் முன்னேறியுள்ளது. வீடு, வைத்திய உதவி, பண்பாட்டை வளர்த்துக் கொள்ளும் வசதிகள், சமுதாய வாழ்க்கைக்குரிய ஏனைய தேவைகள் ஆகியவை கூட்டுறவு நிறுவனங்களிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் இன்று கிடைத்துள்ளவை நாடோடிகளாக வாழ்ந்த அந்நாளில் கிடைத்தற்கரிய ஒன்ருகும்.

கூட்டுறவு நிறுவனத்திலோ அரசாங்கப் பண்ணையிலோ சேராமல் தனியே பயிரிடும் குடியானவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்கள் மங்கோலிய உணவு பொருள் உற்பத்தியில் 6 சதவீதமே உள்ளது என்பதில் வியப்பு ஒன்றுமில்லை. கூட்டுறவுப் பணி என்பது மங்கோலியர்களின் பழைய மரபை ஒட்டியதேயாகும் என்பதை அவர்களிடையே வழங்குகின்ற, ''ஒரு பெரிய ராட்ஸனைக் காட்டிலும் பல கைகள் பயனுடையவை'' என்ற பழமொழியே நிரூபிக்கின்றது.

மங்கோலியப் பொருளாதாரத்தில் விவசாயமே முக்கியமானதாக இருப்பினும் அதை விவசாய நாடு என்று கருதுவது தவருகும். மங்கோலியாவின் தேசிய மொத்த வருமானத்தில் தொழில்கள் மூலம் கிடைக்கின்ற பகுதி 40 சதவீதம் ஆகும். அந் நாட்டின் இயற்கை வளமும், விவசாயக் கச்சாப் பொருள்களும், சிறந்த சுரங்கத் தொழில்களுக்கும் உற்பத்தி தொழில்களுக்கும் அடிகோலுகின்றன. சுரங்கத் தொழிலில் நிலக்கரி (1967இல் 2.5 மில்லியன் டன்கள்) மிக முக்கியமான தொழிலாகும்.

இதுவல்லாமல் எண்ணெய், இரும்பு, இரும்பு அல்லாத கனிப் பொருள்கள், அபூர்வமான உலோகங்கள், கட்டடத்திற்குரிய பொருள்கள், உப்பு முதலானவும் தோண்டப்படுகின்றன. மெல்லிய ரகத் தொழில்களும் உணவுப் பண்ட தொழில்களும் வளர்ச்சி அடைந்த உற்பத்தித் தொழிலாளர்களில் 40 சதவீதம் பேருக்குத் தொழில் வாய்ப்புகள் தருகின்றன. மின்சார உற்பத்தியும் மிக விரைவில் வளர்ச்சி அடைந்து இன்று உற்பத்தியில் செம்பாதி தொழில்களுக்கும் போக்குவரத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது.

கூட்டுறவும் அரசாங்கப் பண்ணைகளும் கிராமத்திலுள்ள மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்தது போலவே நகரம்க்களின் வாழ்க்கையை தொழில் வளர்ச்சி மாற்றியமைத்துள்ளது. மங்கோலிய ஜனத்தொகையில் 50இல் ஒரு பாகமாக உள்ள 2,60,000 பேரைக் கொண்டுள்ள ''உலான் பேடார்'' என்ற தலைநகரம் சோவியத் உதவியுடன் 1934இல் தொழில் வளத்தைத் தொடங்கியது. இன்றைய நிலைமையில் மங்கோலியத் தொழில்களுக்குத் தேவையான இயந்திரப் பொருள்கள் அனைத்தும், அவற்றிற்குத் தேவையான அறிவும் சோவியத் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து ஒரு செருப்புத் தைக்கும் தொழிற்சாலை, உணவு, தோல் முதலியவற்றை பதனிடும் தொழிற்சாலை, திடீர் வீடுகள் கட்டும் தொழிற்சாலை ஆகியவை வளர்ந்துள்ளன. மக்கள் தொகையில் 42 சதவீதம் நகரங்களிலும், பெரு நகரங்களிலும் வாழ்ந்தாலுங்கூட தொழிலாளர் பற்ருக் குறையினுல் இயந்திரங்களின் உதவியை நாடும் நிலை ஏற்பட்டு, தாமே இயங்கும் உற்பத்தி இயந்திரங்களைப் பற்றிய ஆராய்ச்சி இப்பொழுது நடைபெற வேண்டியுள்ளது. உலான் பேடாரில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையில் 70 சதவீதம் இயந்திர சாதனத்தின் உதவி கொண்டே தொழில் நடைபெறுவதால் உழைப்பாளரை நம்பவேண்டிய நிலை மிகக் குறைந்த அளவில் வைக்கப்பட்டுள்ளது.

உலான் பேடாரிலுள்ள நவீனக் கட்டிடங்கள், உணவு விடுதிகள், அரங்கங்கள், காட்சிசாலைகள் இவற்றுக்குப் போட்டியாக அங்கிருந்து 250 கிலோ மீட்டர் வடக்கில் ''டார்கான்'' என்ற நகரம் வளர்ந்து வருகிறது.

(தொடர்ச்சி 32ஆம் பக்கம் பார்க்க)

அண்மைக் கிழக்கின் நாகரிகத் தொடக்கம் பற்றிய புதிய விவரங்கள்

ஈராக் எல்லையருகில் ஈரானின் குஸஸ்டான் மாநிலத்தில் பல ஆண்டுகள் நிகழ்ந்த நில அகழ்வுகளின்போது 5000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த சோகா மிஷ் நகரின் அறிந்தபகுதிகள் காணப்பட்டன. அங்கு புதை பொருளாராய்ச்சியாளர், விலங்குகளும் அன்றுட வாழ்க்கை நிகழ்ச்சிகளும் பொறிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான களிமண் முந்திரைகளைக் கண்டெடுத்தனர். இஃது இருதலையுள்ள மலையாடுகளை மனிதர் கூட்டிச் செல்வதைக் காட்டுகிறது.

Photo © P. P. Delougaz and H. J. Kantor

ஈரானில் 5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த சோகா மிஷ் நகர் தரும் செய்திகள்

ஹெலன் ஜே. காண்டர், பின்ஹாஸ் பி. டெலுகாஸ்

இந்நூற்றாண்டில் வரலாற்றின் எல்லை விரிவடைந்து விட்டது. பண்டைய கிரேக்க, ரோம, விவிலியப் பகுதிகள் பழங்காலப் பண்பாடுகளை ஆயும் இடங்களாக இப்போது விளங்குவதில்லை. அவை தனிச் சிறப்புடன் திகழ்ந்த போதிலும் அண்மைக் கிழக்கின் பண்பாட்டு வளர்ச்சியில் பிற்காலத்தில் தோன்றியவைதாம். அங்கு இப்போது தற்கால அண்மைக் கிழக்கு, மேலை நாகரிகம் வேரூன்றி விட்டது.

உயர் நாகரிகத்தின் பண்புகளாகிய சிக்கலான அரசுக் கூறுகள், விரிவான கலை இயல்புகள் எல்லாவற்றிற்கு மேலாக எழுத்துக் கலை போன்றவை தொடக்கத்திலே இங்குத் தோன்றியதை நாம் அறிய வேண்டும். கி. மு. 4000இன் நடுப்பகுதியில் தென் மெசபொடேமியாவில் எழுத்துக் கலை தொடங்கியதென நமக்குக் கிடைத்துள்ள சான்றுகள் எல்லாம் கூறுகின்றன. இதன் விளைவாக, மெசபொடோமிய வரலாற்றில் இதுவும் உயர் நாகரிகப் பண்புகளாகிய பிறவும் தோன்றும் காலத்தை எழுத்துக்கலையின் தொடக்க காலம் என்பர்.

அக்காலப் பகுதிகள் தென் ஈராக்கின் சில இடங்களில் தோண்டப்பட்டுள்ளன. ஆனால் அவை மிக ஆழத்திலிருப்பதால் அவற்றைக் காண்பது அரிது. மனித வளர்ச்சியில் முக்கியமான இந்நிலையையும், அஃது எவ்வாறு தொடங்கியது என்பதையும் பற்றி அறிய மெசபொடேமியாவின் சில இடங்களைத் தவிர பிற இடங்களையும் ஆராய வேண்டும். மெசபொடேமியாவிற்கு வெளியே யுள்ள பகுதிகளில், நாகரிகத் தொடக்கம் பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்கக் கூடிய முக்கியப் பகுதி தென் ஈராக்கின் அருகிலுள்ள குஸஸ்டான் எனும் ஈரான் மாநிலமாகும்.

குஸஸ்டானில், அபிடெஸ், கருன் ஆறுகளுக்கிடையேயுள்ள சூசியானா வெளியின் வட எல்லையில் நிற்கும் சாகராஸ் மலையின் முன்னே சோகா மிஷ் எனும் பெரிய மேடு உள்ளது. அதை முதலில் ஆய்ந்தபோது எழுத்துக் கலையின் தொடக்க கால அடையாளங்கள் மேல் பரப்பிலே காணப்பட்டன. இதையும் அதன் அமைப்பையும் அளவையும் கண்டு 1961இல்

Photo © P. P. Delougaz and H. J. Kantor



மெசபொடேமியாவில் 6000 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட ஓவிய எழுத்துமுறையின் மறைபொருளைக் காண வெண்ணெய் கடையும் பண்டைய முறை உதவியது. வெண்ணெய் கடையும் பெண்ணின் உருவமுள்ள களிமண் முத்திரை (மேலே) கண்டுபிடிக்கப்படும்வரை, பாலைக் குறிக்கும் 'கா' எனும் சுமேரிய ஓவிய எழுத்து அடையாளத்திற்கு (இடப்புறம்) விளக்கம் தர முடியவில்லை. அஃது இரு கழுத்துள்ள வெண்ணெய் கடையும் பொறியைக் குறிப்பிட்டதென்று இப்போது தெளிவாகின்றது. கீழே, முழு முத்திரையின் படம் வீட்டுவேலை செய்யும் பெண்களைக் காட்டுகிறது.



அதை ஆழமாக ஆயத் துணிந்தோம். சிகாகோ பல்கலைக் கழக கீழ்நாட்டு நிலையத்தின் ஆதரவில் மூன்று ஆய்வுகள் (1961-66) நிகழ்ந்தன. அவை சோகா மிஷ் கி. மு. 3,400-ஐச் சேர்ந்த எழுத்துக் கலையின் தொடக்க கால நகர் என்பதை எண்பித்தன.

அது பழைய நகராக இருந்தபோதிலும், அது தோன்றுவதற்கு முன்னே அங்கு மக்கள் குடியேறி யிருந்தனர். பல நூற்றாண்டுகளாக, ஏன் ஆயிரம் ஆண்டுகளாக அதே இடத்தில் மக்கள் வாழ்ந்து வந்தனர். பண்பாடுகள் தோன்றி மறைந்தன. அவை ஒவ்வொன்றும் எழில் கலங்களில் தனது முத்திரையைப் பதித்துச் சென்றன.

கி. மு. 6,000 அதன் தொடக்க காலமாகும். சோகா மிஷ் தோண்டப்படுவதற்கு முன் நமக்கு அது தெரியவில்லை. அங்கு பளபளப்பான, அக் காலத்தில் காணப்படாத நுட்ப ஓவியங்கள் மிகுந்த மட் பாண்டங்கள் செய்யப்பட்டன.

பிறகு செய்யப்பட்ட மட்பாண்டங்களில் நெருக்கமான வடிவங்கள் காணப்பட்டன. இவை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் பிற்பகுதியில் பல வகையான புனை வடிவங்கள் தோன்ற வழி வகுத்தன.

பல ஆண்டுகளுக்கு முன் சூசாவில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற மட் பாண்டங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் இறுதிப் பருவத்தைக் காட்டுகின்றன. வரலாற்றுக்கு முந்திய பருவங்கள் பலவற்றில் சோக மிஷ் பகுதியில் ஏறக்குறைய 40 ஏக்கர் பரப்பில் மக்கள் மிகுதியாகக் குடியேறி வந்தனர். அவர்கள் உழவர்கள் என்பதை அரிவாள் கற்கள், மண்வெட்டிகள், அரைக்கும் கற்கள் ஆகியவை காட்டுகின்றன. கண்டெடுக்கப்பெற்ற பொருள்கள், சிறப்பாக, சில பருவங்களின் மட்பாண்டங்கள், தென் மெசபொடேமியாவில் செய்யப்பட்டவை போலிருக்கின்றன. ஆயினும், சோகா மிஷ் மக்கள் தனித்து வாழவில்லை

ஹெலன் ஜே. காண்டர். சிகாகோ பல்கலைக் கழகத்தின் கீழை நாட்டு நிறுவனத்தில் தொல் பொருளாராய்ச்சிப் பேராசிரியர்.

பின்ஹாஸ் பி. டெலுகாஸ். லாஸ் ஏஞ்செல்ஸ் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் அண்மைக் கிழக்கு மொழிகளின் துறையில் தொல் பொருளாராய்ச்சிப் பேராசிரியர்; ஈரானில் சோகா மிஷில் நில அகழ்வு நடத்தும் கூட்டு ஈரானியக் குழுவின் இயக்குநர். பேராசிரியர்கள் காண்டரும் டெலுகாஸும் சோகா மிஷில் நான்காவது முறையாக ஆய்வு நிகழ்த்த வந்துள்ளனர்.

Photo © P. P. Delougaz and H. J. Kantor

மேலேயுள்ள படம் ஓர் உருளையிலுள்ளது. இது பண்டைய நாளில் இசைக்குழு இருந்ததென்பதைக் காட்டுகிறது. இதில் விருந்தின் போது இசை நிகழ்வதைக் காணலாம். வலப்புறம்: களிமண் உருண்டையிலுள்ள இப்படத்தில் அரசன் இரு கைதிகளைக் கயிற்றால் பிணைத்துப் படகில் செல்கிறான்.

இசைக் குழு பற்றிய மிகத் தெளிவான புதைபொருள் சான்று

யெனினும், தமக்கே உரிய தனிப் பண்பாட்டை வளர்த்தனர். அஃது ஈரானியப் பண்பாடாகவும் தென் கிழக்கு ஈரானுடன் (பெர்சபோலிஸ், பாசர்காடே சம வெளிகளுடன் தொடர்புடையதாகவும் இருந்தது.

வரலாற்றுக்கு முந்திய நகர்களின் அழிவு மேடுகளில் குடியேறிய மக்கள் வகுத்த நாகரிகம் அதற்கு முந்திய பண்பாடுகளிலிருந்து வேறுபட்டிருந்தது. இந் நாகரிகம் அதே காலத்தில் கீழ் மெசபொடேமியாவில் நிலவியதைப் போலிருந்தது. இவ்வாறாக சூசியானா சமவெளி எழுத்துக் கலையின் தொடக்க கால நாகரிகத்தின் நிலைக்களனாக இருந்தது என்றும், பண்பாட்டுக் கூறுகளை வெளியிலிருந்து பெறவில்லை என்றும் சோகா மிஷ் எண்பிக்கிறது.

மூன்று ஆய்வுகளும் பரந்த நகரின் பற்பல பகுதிகளை வெளிப்படுத்தின; அவை உயர்ந்த ''உள்ளரணின்' அடிப்படை முதல் மேட்டின் கீழ் பகுதிகளிலுள்ள தெருச் சாக்கடை, வீட்டுச் சுவர்கள் வரை வெளிப்படுத்தின. அவ்விடத்தின் ஒரு சிறு பகுதியே இதுவரை தோண்டப்பட்டுள்ள போதிலும், அஃது அங்கிருந்த மக்களின் வாழ்க்கை முறையை ஓரளவு காட்டுகிறது.

சிறிய ஒப்பனை சிமிழ்கள் முதல் பெரிய சேமிப்புக் கலங்கள் வரை பல அளவிலும் வகையிலும் காணப்படும் மட்பாண்டக் குயவ மக்களின் தொழில்களையும் நகரின் வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்ற அலுவல்களையும் காட்டுகிறது. மதச் சடங்கும் பொருள்களிலிருந்து அவர்களது மத வாழ்வும் ஓரளவு தெரிகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு மட்பாண்டத்தின் இரு வாய்களிலும் பெரிய பாம்பொன்று ஆட்டின் கழுத்தைக் கடிப்பது போல் காட்டப்பட்டுள்ளது. இது மனித வாழ்வுக்குத் தேவையான மந்தைகளுக்கும் பாதாள உலக ஆற்றல்களுக்கும் நிகழும் போராட்டத்தைக் குறிக்கிறது. மற்றொரு மதச் சடங்குப் பாண்டத்தில் பல வடிவங்களும், இரு சிங்கங்கள், பின்னிய பாம்புகள், பெரிய மீனைத் தூக்கிச் செல்லும் மனிதர் போன்ற உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

எழுத்துக் கலையின் தொடக்க காலத்தைப் பற்றிக் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளவற்றுள் மிகச் சிறப்பு வாய்ந்தவை பண்டைய களிமண் உருளை முத்திரைப் பொறிப்புகள் எனலாம். அவை அக்காலத்தைப் பற்றி வேறெதையும் விட மிக விரிவான விவரங்கள் தருகின்றன. உருளை முத்திரைகளை மிருதுவான களிமண்ணில் உருட்டி அவற்றைப் பொறித்துள்ளனர்.

அவை கூம்பு முத்திரைகளிலும் கூடான உருண்டைகளிலும் காணப்படும். அவற்றை முழுப் பொறிப்புகள் முதல், தோண்டியெடுத்த கூளத்தைச் சலித்துக் கண்டெடுத்த சிறு துண்டுகள் வரை காணலாம். மூட்டைகளுடனும் சிப்பங்களுடனும் பிணைக்கப்பட்ட தட்டையான 'சீட்டு'களும், வழக்கொழிந்த எண்களுள்ள பாளங்களும் அவற்றுள் காணப்பட்டன. இப்பொருள்கள் அக்காலப் பொருளாதார வாழ்க்கையைக் காட்டுவதுபோல், அவற்றிலுள்ள உருவங்கள் எழுத்துக் கலையின் தொடக்க காலக் கலையையும், அந் நாகரிகத்தின் பிற இயல்புகளையும் தெரிவிக்கின்றன.

இச் சிறு துண்டுகளைப் பேணுதலும், தனி முத்திரைகளுடன் அவற்றைப் பொருத்துவதும், வடிவங்களைச் சீரமைத்து வரைதலும் அரிதாகும். ஏனெனில் அதற்கு ஒரு குறிப்பிட்ட திறமை மட்டுமன்று, பண்டைய மெசபொடேமிய கலை பற்றிய முழு அறிவும் தேவை.

சோகா மிஷில் கண்டெடுக்கப் பெற்ற நூற்றுக்கணக்கான முத்திரைப் பொறிப்புகளில் விலங்குகள், மனிதர்கள், பல அலுவல்களில் ஈடுபடும் அரக்கர்கள் போன்ற பல திறப்பட்ட உருவங்களைக் காணலாம். விலங்குகளையும் செடிகளையும் காட்டும் எளிய உருவங்கள் கூட எழுத்துக் கலையின் தொடக்க கால செதுக்குத் திறத்தைக் காட்டுகின்றன. விலங்குகளின் முக்கிய குறிப்புகள் நுட்பமாக காட்டப் பெற்றுள்ளன.

கலைஞர்கள் நேரில் கண்டதையே சித்தரித்த போதிலும், தமது கற்பனையையும் பயன்படுத்தியுள்ளனர். இரு தலையுள்ள மலையாடு, மனிதன்போல் குந்தியிருக்கும் சிங்கம் போன்ற கற்பனை விலங்குகளையும் படைத்தனர்.

அவர்கள் பல தொழில்களை உள்ளவாறே தீட்டினர். எடுத்துக்காட்டாக, மனிதர் கால்நடையை நடத்திச் செல்கின்றனர். பல வடிவங்களில் காணப்படும் பாண்டங்கள் இடையர், பால் பண்ணை ஊழியர் பயன்படுத்துவன போல் தோன்றுகின்றன. ஒரே முத்திரை பொறித்த இரு பொறிப்புகளில் நூல் நூற்கும் பெண்ணும், இரு கழுத்துள்ள கலத்தில் வெண்ணெய் கடையும் பெண்ணும் காணப்படுகின்றனர். இக்கலம் சித்திரக் கலைக்கும் முற்கால எழுத்து முறைக்கும் ஒரு புதிய தொடர்பை ஏற்படுத்துகிறது. கலத்தின் உருவம் சுமேரிய மொழியில் 'பால்' எனும் சொல்லைக் குறிக்கும் ஓவிய எழுத்துக் குறியாகிய (GA) என்பதை உணர்த்தியது. வெண்ணெய் கடையும் இக் காட்சி (பக்கம் 23) கண்டுபிடிக்கப்படும் வரை அக்குறிக்கும் பாலுக்குமுள்ள தொடர்பு விளங்கவில்லை.

கலைத் திறனையும் அக்கால வாழ்க்கையைத் தெரிவிப்பதையும் பொறுத்த வரையில் இச் செதுக்கல்கள் முக்கியமானவையெனினும் மனித சாதனைகளை எண்பிக்கும் பிற சிறந்த சான்றுகள் இவற்றை விஞ்சி விடுகின்றன.

அவற்றுள் ஒன்று இசையானது குழு வமைப்பு பெற்றிருந்தது என்பதற்குத் தொன்மையான சான்று பகர்கின்றது. இது பல கருவிகள் கலந்த பிற்கால இசைக் குழுவின் முன்னோடியாக இருந்ததெனலாம். பல பொறிப்புகளில் பெரிய நிமிர்ந்த யாழையும் அதனருகில் மண்டியிட்டிருக்கும் பாணனையும் தெளிவாகக் காணலாம். (மேலே இடப்புறம்)

சிறு துண்டுகளிலிருந்து இம் முத்திரையின் முழு வடிவத்தையும் அமைக்கலாம். யாழையும் பாணனையும் தவிர அரை வட்டப் பொருளின்மேல் கைகளை நீட்டியிருக்கும் மற்றொருவனையும் காணலாம். அவன் முரசடிக்கிறான். மூன்றாவது ஆள் கொம்பு வடிவமுள்ள இரு பொருள்களை வைத்திருக்கிறான். அவை பார்ப்பதற்கு

தாளக் கருவிபோல் இருக்கின்றன. ஆயினும் ஒரு சிறு துண்டில், அவற்றில் ஒன்றின் முனை இசைவாணனின் வாயில் காணப்படுகின்றது. ஆகவே அவன் ஊதுகுழலை, அதாவது இசைக் கொம்பை ஊதுகிறான் என்பதும், மற்றொன்றை, அநேகமாக வேறு தொனியுள்ளதை கையில் வைத்திருக்கிறான் என்பதும் தெளிவாகின்றது.

கன்னத்தில் கை வைத்திருக்கும் நான்காவது ஆள் பாடகன் போல் தோன்றுகிறான். பிற்கால எகிப்தியக் கலையிலும், இன்னும் அண்மைக் கிழக்கு நாடுகளிலும் இதே தோற்றத்தைக் காணலாம். சுருங்கச் சொன்னால், நரம்பு, தட்டொலி, துளையிசை முதலிய கருவிகளும் பாடகரும் சேர்ந்த ''இசைக் குழு''வை இங்கு காண்கிறோம்.

'இசைக் குழு' முழுக் காட்சியின் ஒரு பகுதிதான். முரசடிப்பவனைத் தவிர எல்லாம் திண்டில் அமர்ந்திருக்கும் ஒருவரை நோக்கி இருக்கின்றனர். அவர் முன்னால் மேசையில் உணவும் குடிபொருளும் இருக்கின்றன. ஊழியன் அவருக்கு குடிபொருள் கொடுக்கிறான். இக்காட்சி இசை முழங்கும் விருந்தைச் சித்தரிக்கிறது. இத்தகைய விருந்துகள் மதச் சார்புடையனவாக இருந்தன. மேலும் இக்காட்சி பிற்கால மெசபொடேமியக் கலையில் அடிக்கடி காணப்பட்ட காட்சிக்கு முன்னோடியாக இருந்தது. இது முற்கால வம்ச காலத்தில் (கி.மு. 3000ன் முற்பகுதியில்) செதுக்குக் கலையில் பயன்படுத்தப்பெற்றது.



இரு வாயுடைய இம் மட்பாண்டம் சோகா மிஷில் கண்டெடுக்கப் பட்டது. இதில் பெரும் பாம்பொன்று வெள்ளாட்டைக் கழுத்தில் கடிக்கின்றது. இதன் பொருள் விளங்கவில்லை. ஆனால் இது மதச் சடங்குகளுடன் தொடர்புடைய அடையாளமாகும்.

சோகா மிஷின் செதுக்குக் கலையில் போர் நிகழ்ச்சிகள் முக்கிய இடம் பெறுகின்றன. போர்க் காட்சிகளைப் பிற இடங்களில் கண்டெடுக்கப்பெற்ற முத்திரைகளிலும் காண்கிறோம். வில்லாளனையும் அவனது கருவியையும் தெளிவாகப் பெரிதாகக் காட்டும் பொறிப்பு குறிப்பிடத் தக்கதாகும். நெருங்கி அணிவகுத்துச் செல்லும் கூட்டத்தைக் காட்டும் காட்சி பிற இடங்களில் காணப்படுவதில்லை. இது நன்கு பயிற்சி பெற்ற கட்டுப்பாடுள்ள படையைக் குறிக்கின்றது. இன்னொரு முழுமை பெறாத காட்சி வில் தொகுதியை, அநேகமாக படைக்கலக் கிடங்கிலுள்ளவற்றைக் காட்டுகிறது.

ஒரு களிமண் உருண்டையில் காணப்படும் தனிக் காட்சி எழுத்துக் கலையின் தொடக்க காலத்தின் சின்னங்களில் பல முறை தோன்றும் அரசன் அல்லது குருவின் உருவத்தைக் காட்டுகிறது. இதுவரை எங்கும் காணப்படாத தோற்றத்தில் அவன் இங்கு காணப்படுகிறான். போரில் வெற்றி பெற்று படகில் திரும்பி வருகின்றான். ஒரு கையிலுள்ள தண்டாயுதமும், மற்றொரு கையிலுள்ள இரு கைதிகளைப் பிணித்திருக்கும் கயிறும் இதை எண்பிக்கின்றன. (எதிர்ப்பக்கம் மேலே வலப்புறம்)

இவ்வரசனைச் சுற்றிப் பல ஊழியர் உள்ளனர். ஒருவன் படகின் பின்புறம் பிறைநிலா சின்னம் அல்லது விருது வைத்திருக்கிறான். அரசன் சாதாரண இருக்கை அல்லது ஆசனத்தில் அமராமல் எருதில் அமர்ந்திருக்கிறான். இதுவும் கோள் விருதும் அவனது வெற்றிப் பயணத்தைச் சமயச் சார்புடையதாக்குகின்றன.

போர்ச் செயல்களைக் காட்டும் மற்றொரு முத்திரைப் பொறிப்பு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. ஒரே களிமண் உருண்டையின் பல பொறிப்புகளிலிருந்து இக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இது பல கோபுரங்களும் அரண்காப்பும் அமைத்த நகரின் முற்றுகையைக் காட்டுகிறது. சில கோபுரங்களில் ஆட்கள், ஒருவேளை பெண்கள், கைகளை உயர்த்தி உளமுடைந்து சரணடைவதுபோல் சாய்ந்து நிற்கின்றனர். நகரின் முன் இரு பெரிய வெற்றி வீரர் தோற்றவரை அனுப்பிக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. இதுவே போரின் உச்ச கட்டத்தைக் காட்டும்

(தொடர்ச்சி 28ஆம் பக்கம் பார்க்க)

உருளை முத்திரைகளில் போர் காட்சிகளைக் காண்கிறோம். களிமண் உருண்டையிலுள்ள படங்கள் (கீழே) அரண் காப்புள்ள நகரின் முற்றுகையைக் காட்டுகிறது. வலப்புறம்: போர்க்களத்தின் ஒரு பகுதியைக் காட்டும் முத்திரை.



Photos © P. P. Delougaz and H. J. Kantor

ஆடுகள்

பண்டைய ஈரானின் பாண்டங்களில் கலைஞர்கள் பெரும்பாலும் ஆடுகளின் உருவங்களைப் பயன்படுத்தினர். மலையாடுகள் தீட்டப்பெற்ற இக்கலம் (வலப்புறம்) சோகா மிஷில் கண்டெடுக்கப்பட்டது. இது தென்மேற்கு ஈரானில் கி. மு. 3400 செய்யப்பட்டது. 'இக்கலத்திலும் ஈரானின் பிற பகுதிகளிலுள்ள படங்களிலும் கலைஞர்கள் ஆடுகளை மரபான முறைகளில் வரைந்துள்ளதைக் காணலாம்.

Photo © P. P. Delougaz and H. J. Kantor

ஈரானிய பண்டைய கலங்களில் மனிதனும் விலங்கும்

பண்டைய பாரசீக பாண்டங்களில் பலவகை விலங்கு, மனித உருவங்களைக் காணலாம். இங்கு அவற்றுள் பலவற்றை பற்பல வடிவங்களில் தருகின்றோம். அவை இன்றைய ஈரானின் மேற்குப் பகுதியிலிருந்த பண்டைய நகர்களில் புதைந்திருந்தவை; பாகுன் (தெற்கு) சூசா, சோகா மிஷ் (தென் மேற்கு), முகியன், கியான் (மேற்கு), சியாக் (நடுப்பகுதி), ஹிஸார் (வடக்கு) நகர்களில் காணப்பட்டன. ''பாண்டங்கள் குறிப்பாக வண்ணப் பாண்டங்கள் பண்டைய ஈரானின் கிராம சமுதாயங்களின் கலைத் தொழிலைக் காட்டுகின்றன,'' என 'ஆர்க்கியலாஜியா வீவா' (தொகுதி , எண் 1, 1968) எனும் பன்னாட்டுக் காலாண்டு இதழின் ஈரான் தொல் பொருளாராய்ச்சி பற்றிய சிறப்பிதழில் கென்ட் (பெல்ஜியம்) பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் லூயி வான்டென் பெர்க் கூறுகிறார். ''வேறு எந்த நாகரிகமும் இத்தகைய பல்வேறு கலைப் பண்புக் கூறுகளை வகுத்ததில்லை'' என்கிறார். அரிய விலங்கு உருவங்கள், அருவமான வடிவங்கள், கோடுகள், சிறந்த உருவரைகள் எல்லாம் ஈரானியப் பாண்டங்களின் பொற்காலத்தைக் (கி. மு 4,500—3,000) காட்டுகின்றன. பண்டையக் கலைஞர்கள் விலங்கு உருவங்களைப் பாண்டங்களில் வரைந்தனர். பதித்தனர் அல்லது செதுக்கினர். பல முறை மலையாடு, சிங்கம், வேங்கை, சிறுத்தை போன்ற வன விலங்குகளே தீட்டப் பெற்றன. எருதுகளும் குதிரைகளும் பல பொருள்களில் காணப்படுகின்றன. வீட்டிலும் காட்டிலும் வளர்ந்த இவ் விலங்குகள் கடவுளர்களின் அடையாளங்களாக கருதப்பட்டிருக்கலாம். தொடக்கத்தில் கலங்கள் கையால் செய்யப்பட்டன பிறகு குயவன் சக்கரத்தைப் பயன்படுத்தியதும் பெரும் முன்னேற்றம். ''ஆர்க்கியாலஜியா வீவாவிலிருந்து எடுக்கப்பெற்ற படங்கள் முன்னால் பேராசிரியர்கள் லூயி வான்டென் பெர்க் (பெல்ஜியம்) டானல்டு இ. மக்கௌன் (யு. எஸ். ஏ) ரோமன் கர்ஷ்மன் (பிரான்ஸ்) ஆகியோரின் நூல்களில் வெளிவந்தன.



Drawings, taken from "Archaeologia Viva", were originally published in works by Prof. Louis Vanden Berghe (Belgium), Prof. Donald E. McCown (U.S.A.), and Prof. Roman Ghirshman (France). All documents copyright ©



பறவைகள்









Photo © "Archaeologia Viva"

காளைகள்

















(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகத் தொன்மையான கலைக் காட்சியாகும். முற்றுகையின் இறுதியில் நிகழும் வெற்றியும் தோல்வியும் பிற்காலத்தில் ஓவியத்திலும் இலக்கியத்திலும் சிறப்பிடம் பெற்றன. கி.மு. 14, 13ம் நூற்றாண்டுகளில் எகிப்திய கோயில்களிலும், கி. மு. 8, 7ஆம் நூற்றாண்டுகளில் அசீரிய அரண்மனைகளிலும் தீட்டப்பெற்ற ஓவியங்களும், இலியடில் டிராய் நகர் பெண்கள் ஹெக்டரின் உடல் அக்கிலஸின் தேரின் பின்னால் இழுக்கப்பட்டு வருவதைக் கண்டு நகர் வீழ்ச்சியடையப்போவதை எண்ணி அழும் காட்சியும் இங்கு நினைவிற்கு வருகின்றன.

இசை முழங்கும் விருந்துக் காட்சி எழுத்துக் கலையின் தொடக்க காலப் பண்பாட்டு வளர்ச்சி சமயப் பின்னணியில் காட்டுவதுபோல், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட போர்க் காட்சிகளும் அக்கால அரசியலாற்றலின் அமைப்பைக் காட்டுகின்றன.

சிக்கலான பல திறப்பட்ட போர்க் காட்சிகள், அப்போர்கள் தாமாக ஏற்பட்ட சிறு பூசல்களல்ல என்பதைக் காட்டுகின்றன. கடற் பயணங்களும் முற்றுகைகளும் தலைவன் ஒருவனால் திட்டமிட்டுச் செய்யப்படும் போர்ச் செயல்களாகும். மேலும், முற்றுகைக் காட்சி, களத்தில் நிகழும் போரைவிட மிகச் சிக்கலான போர் முறையை மட்டுமல்லாமல், படையாற்றலின் நிலைக்களனான அரண்காப்புள்ள நகர்களையும் காட்டுகின்றது.

முற்றுகைக் காட்சி, எழுத்துக் கலைத் தொடக்க காலத்தின் முக்கியப் பிரச்சினையை, அதாவது அந்நாகரிக எல்லைக்குள்ளும் புறமும் வெவ்வேறு சாதனை நிலைகள் இருந்ததை நினைவூட்டுகிறது. முற்றுகைக் காட்சியை வெற்றிபெற்றவரே செதுக்கியிருக்க வேண்டுமாதலால் கீழ்க்கண்ட இரண்டில் ஒன்று உண்மையாக இருக்க வேண்டும். அக்காலத் தொடக்கத்தில் அதே பண்பாட்டுப் பகுதியில் பகையால் நகர அரசுகள் இருந்திருக்கும்; அல்லது அப்பகுதிக்கு வெளியே, அரண்களுள்ள நகரமைக்கும் திறமை பெற்ற மக்கள் இருந்திருப்பர். எழுத்துக் கலையின் தொடக்க கால நாகரிகமுடையோர் அவற்றைத் தாக்கி சிலவேளை பிடித்திருக்கலாம்.

இதில் எது உண்மையென்று இப்போது திட்டமாகக் கூற முடியாது. சோகா மிஷில் அண்மையில் நிகழப்போகும் ஆய்வுகள் இதையும், மனிதனின் பண்பாட்டு வரலாற்றில் முக்கிய நிலையாகிய எழுத்துக் கலைத் தொடக்க காலத்தைப் பற்றிய பிற செய்திகளையும் விளக்குமென நம்புகிறோம்.

தமிழில்: வள்ளுவன் சிள்ாரன்சு

சோவியத் சமுதாய ஆய்வாளரின் கருத்துக்கள்

போரிஸ் உர்லானிஸ்

போரிஸ் உர்லானிஸ் சமுதாய ஆய்விலும் புள்ளியியலிலும் சிறந்த சோவியத் அறிஞர். ரஷ்ய அறிவியல் கழகப் பொருளியல் நிலையத்தின் சமுதாய ஆய்வுப் பேராசிரியரான இவர் பல நூல்களை, குறிப்பாக புள்ளியியல் பற்றியும், போருக்கும் ஐரோப்பிய மக்கள் தொகைக்குமுள்ள தொடர்புபற்றியும் எழுதியுள்ளார். இவரது "வார் அண்டு பாப்புலேஷன்" (போரும் மக்கள் தொகையும்) என்ற நூலை மாஸ்கோ முன்னேற்ற வெளியீட்டாளர் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிய மொழிகளில் விரைவில் வெளியிடுவர்.

பொதுவாகப் பெண்களை ''மெல்லியலார்'' என்று கூறுவது உண்டானாலும், உடல் வன்மையைப் பொறுத்த மட்டில் இது உண்மைதான். ஆனால், பிறப்பு-நோய் முதலிய சமுதாய நிலைப் புள்ளிவிவரங்கள் உண்மையில் ஆண்களே மென்மைத் தன்மை படைத்தவர்கள் என்று காட்டுகின்றன:

இந்த வன்மைக் குறைவு பிறப்பிலிருந்தே தொடங்குகிறது. உதாரணமாக, சோவியத் நாட்டு பிறப்பு-நோய் முதலிய சமுதாய நிலைப் புள்ளி விவரங்களின்படி அந்நாட்டில் 1966இல் பிறந்த 2,175,000 ஆண் குழந்தைகளில் 63,000 குழந்தைகள் (1000க்கு 29

பெண்களைவிட ஆண்கள் விரைவில் இறக்கின்றனர்

வீதம்) முதல் ஆண்டிலேயே மரித்துவிட்டன. அதே ஆண்டில் பிறந்த 2,066,000 பெண் குழந்தைகளில் 48,000 குழந்தைகள்தாம் (1000க்கு 23 பேர்) பிறந்த முதல் ஆண்டில் இறந்துள்ளனர். இந்த வேறுபாடு மிக முக்கியமானது என்பதை நாம் அறிய முடியும்.

என்ருலும், மிக இளமைப் பருவத்தில் ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் அதிக வேறுபாடு இல்லாமல் வளர்க்கப்படுகிருர்கள். ஆண் குழ்ந்தைகளைப் பொறுத்தமட்டில் தாய்மார்களின் கவனக் குறைவால் இறந்துவிடுகின்றனர் என்று சொல்ல முடியாது. ஏனென்ருல், ஆண், பெண் என்ற வேறுபாடில்லாமல் குழந்தைகள் அனைவரிடத்திலும் தாய்மார்கள் அன்பைச் சொரிகின்ருர்கள்.

இது இப்படியிருக்கவும், ஆண் குழந்தைகளில் அதிகமானவர் இறப்பதற்குரிய காரணம் யாது? உடல் கூற்றைப் பொறுத்தமட்டில் ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண் குழந்தைகள் அதிக வன்மை படைத்திருக்கிருர்கள் என்பது நன்கு விளங்கும். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக பெண் இயல்பு நல்ல எதிர்ப்பு சக்தியைப் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. மனித இனம் நிலைப்பெற்று வாழ வேண்டுமேயானுல், ஆண்களைவிடப் பெண்களின் உயிர் முக்கியமானது என்பதை இயற்கை அன்னையே அறிந்து கொண்டிருப்பதுபோல் தெரிகின்றது.

உயிர் நூல் வல்லுநர்களின் இந்த ஆராய்ச்சியை ஒருபுறம் நிறுத்தி, பிறப்பு-நோய் முதலிய சமுதாய நிலைப் புள்ளிவிவர ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகளிலிருந்து நாம் என்ன அறிந்து கொள்ள முடியும் என்பதைப் பார்த்தல் வேண்டும். பொதுவாக ஆண்களின் சாவு விகிதத்தைப் பெண்களின் சாவு விகித்த்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் என்ன அறிகின்ருேம்? 1968இல் சோவியத் நாட்டு மத்தியப் புள்ளி விவர அலுவலகம், அந்நாட்டில் இறந்தவர்களின் எண்ணிக்கையை வயது வாரியாகவும், ஆண், பெண் பாகுபாடு வாரியாகவும் வெளியிட்டுள்ளது. இதன்படி பார்த்தால், 15 முதல் 19 வயது முடிய உள்ள இளைஞர்களின் சாவு விகிதம் அதே வயதுடைய பெண்களின் சாவு விகிதத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது (இந்தச் சாவு விகிதம் வயது ஏறஏற அதிகரித்துக் கொண்டே செல்லக் காண்கிருேம்.) 25 முதல் 29 வயது முடிய உள்ள ஆண்களின் சாவு விகிதம் அதே வயதுடைய பெண்களின் இறப்பு விகிதத்தைவிட $2\frac{1}{2}$ மடங்கு அதிகமாக உள்ளது. இதன் பிறகு ஆண்களின் சாவு விகிதம் சாவு விகிதத்தைப் போல் இரண்டு மடங்கு இருந்துவருகிறது. மிக அதிகமான வயது வரையில் இரு மடங்காகவே இருக்கக காண்கிருேம்.

360 ஆண்டுகளின் முன்னர்க்கூடப் பெண்களைக் காட்டிலும் 6 சதவீதம் அதிகமான ஆண் குழந்தைகள் பிறப்பதாக அறியப்பட்டது துரதிருஷ்டவசமாக, ஆண்களின் அதிகப்படியான இந்தப் பிறப்பு விகிதம் அப்படியே இருந்திருக்குமேயானுல், ஆண், பெண் இருவருடைய எண்ணிக்கையைச் சமமாக்கி இருக்க முடியும். ஆனுல், இவ் விகிதம் குழவிப் பருவம், பிள்ளைப் பருவம், வாலிபப் பருவம் ஆகியவற்றில் குறைந்து கொண்டே செல்லக் காண்கின்ருேம்.

20 முதல் 24 வயதுவரை ஆண், பெண் இருபாலரும் சம எண்ணிக்கை உள்ளவர்களாகவே இருக்கக் காண்கிருேம். இதனையடுத்துப் பெண்கள் முன்னேறத் தொடங்கிவிடுகிருர்கள் வயது ஏறஏற இந்த வேறுபாடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது சோவியத் நாட்டின் மிக சமீபத்திய ஜனத்தொகை கணக்குப்படி 20 முதல் 24 வயதுடைய பெண்களின எண்ணிக்கை, ஆண்களின் எண்ணிக்கையைவிட 230,000 அதிகம் என்றும், 25 முதல் 29 வயதுவரை உள்ள பெண்களின் எண்ணிக்கை 350,000 என்றும் அறிய முடிகிறது. வயது ஏறஏற இந்த வித்தியாசமும் வளர்ந்து கொண்டே செல்லக் காண்கிருேம்.

மனிதனை உணவு, கல்வி, வளர்ப்பு முறை ஆகியவற்றைச் சேகரித்து வைத்துள்ள ''களஞ்சியம்'' என்று சொல்லலாம். தனி மனிதனுக்குத் தேவையான இப் பொருள்கள் அவனுடைய குடும்பத்தாலும் சமுதாயத்தாலும் தரப்படுகிறது. ஒரு குழந்தையை அல்லது வாலிபனை வளர்ப்பதற்குரிய செலவு எவ்வளவு என்பதை நாம் அறிவோம் ஆதலால் இதற்கு ஏற்படுகின்ற ''முதலீடு'' எவ்வளவு என்பதை கணித்து அறிவது கடினமன்று.

ஒரு மனிதன் தானே உழைக்கத் தொடங்குகின்ற வரையில் அவனுக்காகச் செலவழிக்கப்படும் எல்லாப் பணத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால், இவ்வளவு செலவுக்கும் காரணமாக உள்ள அவனையேகூட ஒரு ''முதலீடு'' என்று சொல்லலாம் என்று தோன்றுகிறது. அவனுடைய வாழ்நாள் முடிய அவன் உழைத்துச சம்பாதிக்கின்றவை எல்லாம் அவனுககுச் செய்யப்பட்ட முதலீட்டின் வருவாயாக்வே கருதப்படும். என்ருலும், மனிதனுடைய வாழ்க்கையைப் பணத்தின் மூலமாகக் கணக்கிடுவது இயலாத காரியம் என்பதை நாம் அறிவோம். மனிதன் தானே ''முதல்'' ஆக ஆவதில்லை. ஆனுல். முதற் பொருளை அவன் உற்பத்தி செய்கின்ருன். அவனுடைய வாழ்நாளில் செய்த செயல்க்ளின் மூலம் ஆன்மீகத் துறையிலும் உலகாயுதத் துறையிலும் அவனுடைய உழைப்பின் பயனை முதலீடாக விட்டுச் செல்கிருன்.

Photo © HenriCartier-Bresson



Drawing © APN

உலகில் ஐந்து விதிவிலக்குகள் :

கம்போடியா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மேல் வால்டா

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் அவன் உற்பத்தி செய்யக் கூடிய மிக முக்கியமான பருவத்தில் அவனுடைய இறப்பு விகிதம் பெண்களைவிட 2 மடங்கு அதிகப்பட்டால், சமுதாயத்தில் ஏற்படுகின்ற பொருளாதார நஷ்டத்தை நாம் நினைத்துப் பார்க்க முடியும்.

ஆண்களின் இந்த இறப்பு விகிதாசாரம், குடும்ப வாழ்க்கையையும் குலைத்துவிடுகிறது. ஒரு குடும்பத்தில் கணவன் இறந்து விடுதல் என்பது பெரியதொரு நஷ்டமாகும். கணவன் இல்லாமல் ஒரு தாய் தன் பிள்ளைகளை வளர்க்க முற்பட்டால், குடும்பத்திலுள்ள அனைவரும் துன்புற நேரிடுகிறது.

சோவியத் நாட்டில் ஒரு கைம்பெண்ணின் வாழ்க்கை மிகக் கொடூரமானது ஆகும். அவர் மறுமணம் செய்து கொண்டு குடும்பத்திற்கு ஒரு சிறிய தந்தையைக் கொண்டு வருவதற்குரிய வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. புள்ளி விவரங்களின்படி பார்த்தால், கணவனை இழந்தவர்களின் எண்ணிக்கை மிகமிக அதிகமாகவும், மனைவிகளை இழந்த கணவன்மார்களின் எண்ண்ணிக்கை மிகக் குறைவாகவும் இருக்கக் காண்கிறோம். மனைவியை இழந்த ஓர் ஆண் மகன் உடனடியாக மறுமணம் செய்து கொள்கிறான். சோவியத் நாட்டில் ஒரு பெண் மறுமணம் செய்து கொள்வது என்பது மிகவும் கடினமான காரியம். அதற்குரிய பல்வேறு காரணங்களுள் ஆண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பது முக்கியமானதாகும். ஒரு கைம்பெண் வயதில் மூத்தவளாகவும், குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய பொறுப்புள்ளவளாகவும் இருக்கும் பொழுது இந்நிலை மிகவும் கடினமாகி விடுகிறது.

Drawing M. Skobelev © APN

இறப்பு விகிதம் அதிகமாக இருப்பதன் காரணமாக ஆண்களின் எண்ணிக்கை குறைந்து, வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் துயரம் தருகின்ற பல்வேறு நிலைகளை உண்டாக்குகிறது. இலட்சக்கணக்கான குடும்பங்கள் ''உடைந்து'' போவதற்கும், எண்ணிலடங்காத பெண்க்ள் நியாயமான முறையில் குடும்பத்தை நடத்த முடியாமல் போவதற்கும் காரணம் இதுவேயாகும்.

போர் ஒன்றுதான் ஆண்களின் அதிகப்படியான இறப்பு விகிதத்திற்கு காரணம் என்று நாம் நினைப்போம். ஆனால், இது உண்மை அன்று. இன்றைய நிலையில் 42 வயதுக்குட்பட்ட சோவியத் நாட்டு ஆண்களின் ஒருவர்கூட இரண்டாவது உலக யுத்தத்தில் பங்குகொள்ளவில்லை. மேலும் 30 முதல் 40 வயது வரையிலுள்ள ஆண்களின் இறப்பு விகிதம் அதே வயதுடைய பெண்களின் இறப்பு விகிதத்தைக் காட்டிலும் மிக அதிகமான சதவீதம் ஆகிறது. எனவே இந்த விகிதத்தின் காரணம் போரோ அல்லது அதன் பயனோ அன்று. வேறு எது என்றால், பெண்களின் உடம்பைப் பாதுகாப்பதைக் காட்டிலும் ஆண்களின் உடல் நிலையைப் பாதுகாப்பதில் நாம் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதே ஆகும்:

நீண்ட காலம் உயிர் வாழ்வதற்குரிய சந்தர்ப்பங்களை ஆண், பெண் இருவருக்கும் சமமாக ஆக்க வேண்டுமேயானால், நாம் என்ன செய்யவேண்டும்? முதலாவதாக போதைப் பொருள்கள், புகையிலை, சாராயம் ஆகியவற்றை அளவு மீறிப் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற ஆபத்துகளை ஒவ்வொருவரும் உணருமாறு செய்யவேண்டும். பெருங் குடிப்பழக்கமும், போதைப் பொருள்களைப் பயன்படுத்துகின்ற பழக்கமும், சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் பெரும் இழப்பை உண்டாக்குவதுடன் குடும்பத்தில் பகைமையை உண்டாக்கி விவாக ரத்துகளையும் அதிகப்படுத்துகின்றன. பெருங் குடிப்பழக்கத்தில் ஆண்களே அதிகம சாகின்றனர். அப் பழக்கம் அவாகளுடைய உடல் நிலையைத் கெடுப்பதுடன கல்லீரல் நோயையும், இருதய நோயையும் உண்டாக்கக் காரணமாகிறது.

புகைப் பிடிப்பதும் ஒரு தீயப் பழக்கந்தான். என்றாலும், இளைஞர்களிடையே புகைப் பிடிக்கும் பழக்கம் மிக விரைவாக அதிகப்பட்டு வருவதைக் காண்கிறோம். பெண்களைக் காட்டிலும் ஆண்களே மிகமிக அதிகமாகப் புகைப் பிடிக்கின்றனர். சென்ற சில ஆண்டுகளில் சிகரெட்டு விற்பனை மிகமிக அதிகமாகி, ஏறத்தாழ ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பாக்கெட் என்ற அளவுக்குச் சென்று விட்டிருக்கின்றது. புகைப் பிடித்தலால் ஏற்பட்ட இந்த அதிகரிப்பு நுரையீரல் நோய், புற்று நோய் முதலியவற்றால் ஏற்படுகின்ற இறப்பு விகிதத்தையும் அதிகப்படுத்தி உள்ளது என்பதையும் அறியமுடியும். சிறிதுகூடத் தாமதிக்காமல் புகைப் பிடித்தலை எதிர்த்து முழு மூச்சான பிரசாரம் தொடங்க வேண்டும். இது உண்மையில் பயனளிக்க வேண்டுமேயானால், ''புகையிலையின் தீமைகள் பற்றி மக்களிடம் வெறும் சொற்பொழிவுகள் செய்து பயன் ஒன்றுமில்லை.

சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் ஆண்களின் சராசரி வயது 66 ஆகவும் பெண்களின் சராசரி வயது 74 ஆகவும் இருக்கக் காண்கிறோம். என்றாலும், உலகம் முழுவதும் எடுத்துக் கொண்டுப் பார்த்தால் சராசரி வயது, நாட்டுக்கு நாடு வித்தியாசப் படுவதையும், அதிலும் சிறப்பாக ஆண்களின் வய்து வித்தியாசப்படுவதையும் காண முடியும். 75 நாடுகளில் எடுக்கப்பட்டப் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு பார்த்தால், 5 நாடுகளில் . மட்டுமே பெண்களைவிட ஆண்கள் அதிக வயது வாழ்வதைக் காண முடிகிறது. இந்த ஐந்து நாடுகளில் ''இந்தியா, பாகிஸ்தான், கம்போடியா, இலங்கை'' ஆகிய நான்கு நாடுகள் ஆசியாவிலும் ஐந்தாவது நாடு ஆப்பிரிக்காவிலுள்ள ''ஹோல்டா'' நாடுமாகும்.

எஞ்சியுள்ள 70 நாடுகளிலும் ஆண்களைவிடப் பெண்களே அதிக நாள் வாழ்கின்றார்கள். இந்த வேறுபாட்டின் அளவைக் கீழ்வரும் அட்டவணை தெரிவிக்கும்.

7 ஆண்டுகளுக்குமேல்	2
6 முதல் 7 ஆண்டுகள்வரை	10
5 முதல் 6 ஆண்டுகள்வரை	17
4 முதல் 5 ஆண்டுகள் வரை	16
3 முதல் 4 ஆண்டுகள்வரை	12
2 முதல் 3 ஆண்டுகள்வரை	9
1 முதல் 2 ஆண்டுகள்வரை	3
1 ஆண்டுவரை	1
மொத்தம்	70

இக் கட்டுரையில் ஆண் மக்களின் ஆயுளை நீட்டுவதன் இன்றியமையாமை பற்றித் தெரிவிக்க விரும்பினேன். சில நூல்களிலும் கட்டுரைகளிலும் மக்கள் 100, 120, 150 ஆண்டுகள் கூட வாழலாம் என்றும், வாழ வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருப்பதைப் படிக்கின்றோம். அப்படியே ஒரு சிலர் வாழ்வதைப் பற்றியும் அறிகின்றோம். என்றாலும் அவர்கள் நடைமுறைக்கு விதிவிலக்கானவர்கள்.

(தொடர்ச்சி 32ஆம் பக்கம் பார்க்க)

ஹங்கேரியில் உருப்படிவ மூலம் வரலாறு கற்பிக்கும் முறை

மேலே : டெப்ரசென் (ஹங்கேரி) உயர்நிலைப்பள்ளி மாணவிகள் ஆதென்ஸ் உள்ளரணின் உருப்படிவத்தைச் செய்து முடிக்கின்றனர். கீழே இடப்புறம் : பைசாவின் சாய்ந்த கோபுரம். கீழே வலப்புறம் : நுணுக்கமாக அமைக்கப்பட்டுள்ள டெர் ஹெல் பாஹ்ரி (தீப்ஸ், எகிப்து) கோவிலை மக்கள் பார்க்கின்றனர். இவ்வுருப் படிவங்கள், மாணவர்களிடையே வரலாற்றையும் பற்பல பண்பாடுகளையும் பற்றிய ஆர்வத்தை, பாட நூல்களையும் திரைப்படங்களையும்விட மிகுதியாகத் தூண்டி எழுப்புகின்றன.

நிழற்படம் : பால் அல்மாசி

Photos © Paul Almasy

ஹங்கேரி உயர்நிலைப் பள்ளிகளில் மூவளவைக் கூறுகளுள்ள பொருள்களால் வரலாறு கற்பிக்க முனைந்துள்ளனர். டெப்ரசெனிலுள்ள 'சொக்கொனுய்' பெண் பள்ளியில் ஜான் பார்க் சால்மி எனும் வரலாற்று ஆசிரியர் உலகின் பல பகுதிகளிலும் பண்பாடுகளிலும் காணப்பட்ட இல்லங்கள், கோயில்கள், புதைபொருளாராய்ச்சிப் பகுதிகள், பொதுக்கட்டிடங்கள், சின்னங்கள் போன்ற எல்லா வகைக் கட்டிடங்கள், கலையின் உருப்படிவங்களையும் கொண்ட பள்ளிப் பொருட்காட்சிச் சாலையை அமைத்துள்ளார். மாணவிகளே சில கைவினைஞரின் துணையுடன் இவ்வுருப்படிவங்களைச் செய்திருப்பது இதன் சிறப்பியல்பாகும். வரலாற்றிற்கு முற்பட்ட சின்னங்களாகிய கார்னக்கின் (பிரான்ஸ்) நிற்கும் கற்கள், ஸ்டோன் ஹெஞ்சின் (பிரிட்டன்) குத்துக்கல் வட்டம் ஆகியவற்றையும், கைசஹ் எகிப்திய பிரமிட்கள், நோவ்கொராடிலுள்ள (ரஷ்யா) பைசாண்டிய கோயில், ஹங்கேரியின் பல சின்னங்கள், ஆகியவற்றையும் மரம், சாந்து, அட்டை இவற்ருல் செய்துளளனர். மாணவிகள், கருவிகள பண்டைய உடைகள், கருவிகள் போன்றவறறைப் பொருட்காட்சி சாலைகளிலிருந்து பெற்று அவற்றைப் போலவே மாதிரிகளைச் செய்திருக்கின்றனர். பாட நூல்களிலுள்ள படங்களையும் திரைப் படங்களையும் விட இவ்வுருப்படிவங்கள் மாணவரின் கவனத்தை மிகுதியாக ஈர்க்கின்றன என்று திரு பார்க்சால்மி கூறுகிருர் டெப்ரசெனைப் பார்த்து ஹங்கேரியிலுள்ள பிற பள்ளிக் கூடங்களும் இம்முறையைப் பின்பற்றுகின்றன.



(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவீன இயந்திர சாதனங்களோடு வளர்ச்சி அடையும் டார்கான் நகரம் இறுதியில் உலான் பேடாரோடு சமமானச் சிறப்பைப் பெறலாம். இன்றுள்ள அதன் ஜனத்தொகையாகிய 25,000 பேர் முடிவில் 200,000ஆக வளரலாம். டார்கான் நகரம் இறுதியாக எப்படி வளர்ச்சி அடையும் என்பதை நகரத் தந்தையின் அலுவலகத்திலுள்ள விரிவான வரைபடங்களைக் கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.

இன்றைய வளர்ச்சி நிலையைக் கொண்டு கணக்கிட்டால் டார்கான் நகரம் அடுத்த 20 ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடையமுடியும். முன்னெச்சரிக்கையோடும் கற்பனைத் திறத்தோடும் கட்டட அமைப்புகள் செய்யப்படுவதால் டார்கான் நகரம் ஆசியாவின் மிகச் சிறந்த நவீன நகரமாக வளர முடியும்.

நகரத்தின் நடுவில் மிகப் பிரம்மாண்டமானதும் அழகுடையதுமான ஒரு பண்பாட்டுப் பொதுக் கூடம் கட்டப்பட்டு அதனுள் ஓர் அரங்கமும் விளையாட்டு வசதிகளும் அமைக்கப்படும். வாணிகப் பகுதி, ஆட்சித் துறைப் பகுதி ஆகியவற்றுக்கு வேண்டிய சிறந்த கட்டடங்களும் நடுவே பெற்று இவற்றைச் சுற்றி குடியிருப்புகளும் அவற்றையடுத்து பசேல் என்ற தோட்டங்களும் இடம்பெறும்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர்கூட புல் தரையாக இருந்த டார்கான் இன்னும் குழந்தைப் பருவத்தில் இருந்தாலும் இப்பொழுதோ சிறந்த தொழில் வளத்தோடு விளங்கக் காண்கிறோம். குடியிருப்புகளில் இருந்து தனியே பிரிக்கப்பட்டு அமைந்துள்ள தொழிற்சாலைப் பகுதிகளில் செங்கல் உற்பத்தி செய்யும் நிறுவனம், சிமெண்ட் நிறுவனம், திடீர் வீடு கட்டும் கச்சாப் பொருள் தயாரிக்கும் நிறுவனம், தானியக் களஞ்சிய ஏற்றம், மின்சார நிறுவனம், சீதோஷ்ண நிலை நிறுவனம் ஆகியவை அமைந்துள்ளன. மிகப் பெரிய தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்று தயாராகி வருகிறது. உலான் பேடாரைப் கற்பனைக்கு அடங்காத வளர்ச்சியை டார்கான் பெறமுடியும்.

மங்கோலியாவைப் பற்றித் தவறான முறையில் கேள்விப்பட்டுள்ள வெளிநாட்டு யாத்திரிகர்கள் உலான்பேடார், டார்கான் ஆகியவைகளில் உள்ள தொழில் வளர்ச்சியைக் காணும் பொழுதும் இயந்திர சாதனத்தைக் காணும்பொழுதும் பண்ணைக்கூட்டுறவு நிறுவனம் ஆகியவற்றை காணும் பொழுதும் வியப்பு அடைகிறார்கள். இந்த யாத்திரிகர்கள் உலான் பேடார், டார்கான் ஆகிய இடங்களில் மடிப்புக் கலையாத சட்டைகள் விற்கப்படும் கடைகளையோ அங்கும் இசைக் கச்சேரிகள் நடைபெறும் என்பதையோ சர்க்கஸ் முதலியவற்றைக் காணமுடியும் என்பதையோ எதிர்பாராமல் தாங்கள் படித்த புவியியல் நூலில் என்ன கூறியுள்ளதோ அதையே நம்பிக் கொண்டு வருகிறார்கள்.

நவீன யுகத்தில் மங்கோலியா மிக வேகமாக முன்னேறிச் செல்கிறது. ஆர்வத்தோடு கற்கும் மாணவர்கள் நிரம்பி வழியும் பள்ளிக்கூடங்களும், எதிர்காலத்திற்குச் சிறந்த ஆதாரமாக உள்ள கல்வியை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதும் காணக் கூடியவை. மங்கோலியாவில் ஒரு பல்கலைக் கழகமும், ஐந்து கல்லூரிகளும், ஒரு பல் தொழில் நிறுவனமும் 19 தொழில் நுணுக்கப் பள்ளிகளும், 500 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இங்குள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் முறையே 207,000; 9,500 பிள்ளைகள் படிக்கின்றனர். விஞ்ஞானக் கழகத்தை அல்லாமல் ஆராய்ச்சி கழகங்கள், சோதனைக் கூடங்கள், பொது நூல் நிலையங்கள் ஆகியவையும் மங்கோலியாவில் உள்ளன.

மங்கோலியாவிலுள்ள பல்கலைக் கழகத்தில் 4,000 மாணவர்கள் கற்கின்றனர். நில நூல் பற்றி 37 பேர் படித்துப் பட்டம் பெறுவதையும் அவர்களுடைய நாட்டில் இன்னும் தோண்டப்படாத கனி வளம் எவ்வளவு இருக்கின்றது என்பதையும் நினைக்கும்பொழுது இவர்களுடைய கல்வி உடனடியாகப் பயன்படும் என்று நினைக்கத் தோன்றுகிறது. மங்கோலியாவின் கனி வளம் இன்னும் நன்குப் புரிந்து கொள்ளப்படவில்லை. என்றாலும் இந்த இளைஞர்களுடைய ஆர்வத்தைப் பார்க்கும் பொழுது வெகு விரைவில் இவை பயன்படுத்தப்படும் என்றே தோன்றுகிறது.

உலான் பேடாருக்கு அருகிலுள்ள நேலைகாவில் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம் ஒன்று உள்ளது. இளைஞர்கள் ஆர்வத்தோடும் விருவிருப்போடும் இங்குச் சேர்ந்து பணிபுரிகிறார்கள். ஒரு சிறந்த எதிர்காலத்தின் தொடக்கத்தில் தாங்கள் இருப்பதை அவர்கள் அறிந்துள்ளார்கள். எல்லைப்புறத்தின் புது வளர்ச்சிக்கு அடையாளமாக கட்டாந்தரையில் தோன்றிய டார்கானைப் போலவே நேலைகாவிலுள்ள தொழில் நுட்ப வளர்ச்சி மாணவர்களும் மங்கோலிய நாட்டிலேயே அதற்கு முன்னர்க் காணப்படாத முறையில் புதிய ஆற்றல்களைப் பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு துறை வளர்ச்சியும் சிறந்த பயனை அளிக்கின்றது. ஒவ்வொரு முறையும் புதியது காண்கின்றதில் மங்கோலியா மகிழ்ச்சி அடைகின்றது. டார்கானைப் போன்ற ஒரு நகரத்தை மக்கள் வளம் குறைந்த புல்வெளியில் தோற்றுவிப்பதிலும், மண்ணின் அடியிலுள்ள கனி வளத்தைத் தோண்டி எடுப்பதிலும் இச் சிறப்பு இருக்கின்றது.

நவீன உலகத்தில் வேறு இடங்களில் காண முடியாத அளவுக்கு அமைதியும் சாந்தமும் மனம் கவர்கின்ற அழகும் நிறைந்துள்ள நிலையை எடுத்துக் காட்டினாலொழிய மங்கோலியாவைப் பற்றிய முழு விவரமும் தந்ததாகச் சொல்லமுடியாது.

கோபிப் பாலைவனத்தின் மிக நீண்ட வெளியிலிருந்து வடக்கே உள்ள மலைகள், குன்றுகள் ஆகியவரை அமைதியும் அழகும் நிறைந்த பகுதியாகும் மங்கோலியா. உலான் பேடாரிலிருந்து டார்கான் செல்லும் பாதையில் நீல வானத்தைப் போன்ற நீல நிறமுடைய ஐரிஸ் பூக்கள் நிறைந்துள்ளன. வசந்தத்தில் கதிரவனுடைய ஒளி பட்டுப் புதிய புல் மணம் பரப்புவது மகிழ்ச்சி ஊட்டுவதாகும்.

கண்ணுக்கு எட்டிய தூரம் மலைகளும் குன்றுகளும் பல்வேறு நிறங்களுடன் அலை அலையாய் காட்சியளிக்கின்றன. மிகச் சமீபத்தில் உள்ளவை பச்சை நிறத்துடனும் அவற்றை அடுத்துள்ளவை மஞ்சள் ஆகவும் இன்னும் எட்டியிருப்பவை சாம்பல் நிறத்துடனும் மிக நீண்ட தூரத்தில் இருப்பவை ஊதா நிறத்துடனும் விளங்குகின்றன. மிகக் குறுகிய காலத்தில் வாழ்க்கையில் தோன்றும் கவலையிலிருந்து மனிதன் விடுபட்டு இவற்றோடு ஒன்றிவிட முடிகிறது.

மங்கோலியாவைப் பற்றிப் பேசும் பொழுது ஆசியாவை மறந்துவிட வேண்டும். இளமையில் நாம் கற்ற புவியியல் பாடங்களில் சொல்லப்பட்டதுபோல மங்கோலியா என்பது மிகவும் பின் தங்கிய நாடு என்றோ, வரலாற்று அறிஞர்களால் கூறப்பட்டபடி ஒரு விநோதமான பகுதி என்றோ நினைக்கின்ற காலம் மலையேறிவிட்டது.

அது மிக பரந்தவொரு எல்லைப் பகுதி நாடாகும். அங்குக் கிடைக்கின்ற இயற்கை வளம் காரணமாக மாபெரும் வளர்ச்சி அடையக்கூடிய வாய்ப்புகளை பெற்றுள்ளது. எல்லா வளங்களிலும் சிறந்ததாகிய மங்கோலியா மக்கள் வளம் இந்த வளர்ச்சிச் சவாலை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளது.

தமிழில் : அ. ச. ஞா.

(30ஆம் பக்கம் தொடர்ச்சி)

எனவே ஒருசில ஆசிரியர்கள் மனிதனின் ஆயுட் காலத்தை இரட்டிக்க முடியும் என்று பேசும்பொழுது அவர்கள் ''ஆண்டிகள் கூடி மடம் கட்டின'' முறையில்தான் பேசுகிறார்கள் என்பதை அறியமுடியும். விஞ்ஞானக் கதை எழுதுகிறவர்கள் மனிதன் சாவாமல் வாழ முடியுமென்று கூறுவதுபற்றி நாம் ஒன்றுமே சொல்லப் போவதில்லை.

இந்தக் கற்பனைகளை விட்டுவிட்டு வருந்தத் தகுந்த உலகியல் நடைமுறைக்கு வருவோமேயானால், ஆண்களின் ஆயுளை நீட்டுவது என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உள்ள இறப்பு விகிதத்தைக் குறைப்பதுதான் என்பதை அறிய முடியும்.

ஆண், பெண் இருவருடைய ஆயுட் காலம் சமமாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லும்பொழுது பெண்களின் முக்கியத்துவத்தை குறைக்கின்றேன் என்பது கருத்து அல்ல. பகல் முழுவதும் அலுவலகங்களில் பணி புரிந்து, குடும்பத்தையும் பராமரிக்கின்ற இரட்டைப் பாரம் தாங்குகின்ற பெண்கள் நம்முடைய மரியாதைக்குரியவர்கள். அதேபோல் ஆண்களும் நீண்ட நேரம் உழைத்துப் பின்னர் குடும்பப் பாரத்தையும், சமுதாய பாரத்தையும் தாங்குகின்ற காரணத்தால் நம்முடைய மதிப்பைப் பெறுகிறார்கள். என்றாலும், பிறப்பு—நோய் முதலிய சமுதாய நிலைப் புள்ளிவிவர ஆராய்ச்சியின் மூலம் பார்த்தால், ஆண் மகனே ''மெல்லியலான்'' என்று சொல்லத் தகுதியுடையவன்.

தமிழில்: அ. ச. ஞா

யுனெஸ்கோ செய்தியறை

எழுத்தறிவுப்புக்கான 1969 இன் முகம்மது ரேஸா பஹ்லவி பரிசு

முதியோர் கல்வியில் தலைசிறந்த பணிக்குரிய இந்த ஆண்டின் முகம்மது ரேஸா பஹ்லவி பரிசு கம்போடிய தேசிய எழுத்தறிவிப்புக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. தொண்டர்கள், பௌத்தத் துறவிகள், படைவீரர்கள், உள்துறை ஊழியர்கள், மாணவர்கள் என்று இலட்சக்கணக்கானவர்களை உள்ளடக்கி எழுத்தறிவித்தலை வளர்க்கவும், தேசிய முன்னேற்றத்தில் பங்கு கொள்வதை வலியுறுத்தவும் கூடிய இயக்கத்தைத் திருப்தியாகவும், சிறப்பாகவும் செய்து முடித்தமைக்கு இரான் ஷா வழங்கிய இந்த 5000 டாலர் பரிசைக் கம்போடியன் குழு பெற்றுள்ளது.

மூன்றும் பன்னாட்டு எழுத்தறிவிப்பு நாளையொட்டி செப்டம்பர் 8ஆம்நாள் யுனெஸ்கோவின் பாரிஸ் தலைமையகத்தில் நடந்த விழாவில் இப்பரிசு அளிக்கப்பட்டது. தவிர, டோகோலாஸ் எழுத்தறிவிப்புக் குழு உறுப்பினர் பாஸ்டர் சார்லஸ் டி. ஹெய்ன், ஆஸ்திரேலிய கோடைக் கல்வி நிலையம். இந்தியாவின் பம்பாய் சமூகக் கல்விக் குழு, மாலியின் பொம்பாரா தொழில் நுணுக்கக் குழு, நேபாள மாதர் நிறுவனம், பாகிஸ்தானின் வழிகாட்டிகள் சங்கம், டுனீசியாவின் முதியோர் கல்விக் கூடம், யுகோஸ்லாவியாவின் பெல்கிரேட் டெலிவிஷன் ஆகிய ஏழு நிறுவனங்களுக்குப் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நிருவாகத்திறன் பன்னாட்டிலும் பரவ...

நிருவாகத் திறனைப் பன்னாட்டிலும் பரப்பும் ஓர் உலக மாநாடு—மாணவர்களே இந்தப் பிரச்னை பற்றி முழுக்க அமைத்த பன்னாட்டு முறையிலான நேர் விவாத மாநாடு நவம்பர் 17 முதல் 21 வரை இதாலி டூரினில் நடைபெறும். மாணவர்களே நிருவகிக்கும் எய்செர் எனும் பலன் கருதாத ஜெனிவா பன்னாட்டுக் கழகம் ஆண்டுதோறும் 350 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 5000 மாணவர்களுக்கு பயிற்சிப் பணிகளைப் புரிய வாய்ப்பளிக்கிறது. இம்மாநாட்டில் வணிகர்கள், கல்வியாளர்கள், அரசியல் அதிகாரிகள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து அறிவுத் திறமை, நிருவாகத்திற்குத் தேவையான சார்புகள் பற்றியும் அவற்றை நாடுகளிடையே பரிமாற்றம் செய்துப் பெரிதும் பரவ விடுவது பற்றியும் விவாதிப்பார்கள்.

செய்திக் கதிர்கள்.

■ ஜப்பானின் முதலாவதும், உலகின் நான்காவதுமான அணுசக்தி வணிகக் கப்பல் டோக்கியோவில் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

■ ரஷிய சோவியத் இணைப்புக் கலைக் களஞ்சியின் முதல் தொகுதி அண்மையில் மின்ஸ்கில் வெளியிடப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்குள் 12 தொகுதிகளை வெளியிடும் பணி முடிவுறும்.

■ உணவு வேளாண்மைக் கழகத்தின் கணக்கெடுப்புப்படி, முன்னேறும் நாடுகளில் ஏற்றுமதி வருமானம் 1968இல் 2 சதவிகிதம் உயர்ந்துள்ளது.



இடப்புறம்; புகழ்மிகு பெல்ஜிய ஓவியர் ரெனே மார்க்ரிட் தீட்டிய ''பறத்தல்''. வலப்புறம்: இப்பூச்செண்டு சுவிட்ஸர்லாந்தின் ஃபிராங்காய் போச்சன் வரைந்த ''ஐம்புலன்கள்'' என்பதில் ஒன்று,

யுனிசெ:ஃப் வாழ்த்து அட்டைகள்

யுனிசெஃப் வாழ்த்து அட்டைகள், 1969 (இப்போது விற்பனையாகின்றன. இவற்றில் ''மரபான'' படங்களும் (இடைக்கால ஒளிர் வண்ணப்படங்களும், லூக்காஸ் கிரனுக், ஹென்றி (டுவனியர்) ரூஸோவின் ஓவியங்களும், (பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க், நெதர்லாந்து, சுவிட்ஸர்லாந்து, யு.எஸ்.ஏ.) போன்ற நாடுகளின் புகழ்மிகு ஓவியர் தரும் தற்காலப் படங்களும் காணப்படுகின்றன. யுனிசெஃப் அட்டைகள், 120 நாடுகளின் குழந்தைகளுக்கு, ஐ.நா. குழந்தை நிதி உணவு, மருந்து, கல்வி வழங்க உதவுகின்றன. (சென்ற ஆண்டு 5.8 கோடி அட்டைகள் விற்பனையாயின). 10 அட்டைகள் 20 குழந்தைகளைத் தோல் நோயிலிருந்து குணமாக்கும் பெனிசிலின் வாங்க உதவுகின்றன. யுனிசெஃப் 1970 குறிப்பேட்டுப் பஞ்சாங்கமும் விற்பனையாகின்றது. இதில் இருமொழி மேற்கோள்களுள்ள 54 முழுவண்ணப் படங்கள் உள்ளன. ஆங்கிலம்-பிரெஞ்சு, ஆங்கிலம்-ஸ்பானிஷ், ஆங்கிலம்-ஸ்வீடிஷ், ஆங்கிலம்) போர்த்துக்கீசியம், பிரெஞ்சு-டச்சு ஆகிய 5 பதிப்புகள் உள்ளன. (விலை டாலர் 2.50, 15 சிலிங், 12 பிராங்க்).





இடக்கோடி: பிரெஞ்சு ஓவியர் டாமி யுங்காரின் 'இலகு கிறிஸ்மஸ்'; இதில் கிறிஸ்மஸ் மரத்தில் அணிபொருள் அமைக்க கிறிஸ்மஸ் தந்தை தமது கயிற்றை கலைமானின் கொம்புகளில் கொளுவி இணைக்கின்றார். இடப்புறம்: சிறந்த பிரெஞ்சு கலைஞர். விக்டர் வசார்லி அளிக்கும் இரு வடிவங்களுள் ஒன்றாகிய 'விண்மீன்.'.

மேலே இடப்புறம். ''எகிப்துக்கு ஓடுதல்'', இஃது ஈக்வடாரின் நாட்டுக் கலைக்கு எடுத்துக் காட்டு.
மேலே வலப்புறம்: பிரெஞ்சு புகழ்மிகு முற்கால ஓவியர் ஹென்றி (டுவனியர்) ரூஸோ (1844-1910) வின் ''குளிர் காலம்''. இவர் காடு, பாலை, பசுந்தழை போன்றவற்றை வரைந்து வந்தார்.

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவைபோன்ற இன்னும் பல எழுத்துக்களிலும், இதை அவர் வலியுறுத்தினுர்.

அவருடைய சமாதான உறுதிக்கு உந்துதலாய் விளங்கியவை, பல உணர்ச்சிகள். இயல்பாகவே, அவர் உடலும், உள்ளமும், வன்முறை, காட்டுமிராண்டித்தனம் ஆகியவற்றின் வெளிப்பாடுகளைக் கண்டு வெறுத்தன. ஐந்தாம் சார்லஸுக்கு அரசியல் ஆலோசகராய் விளங்கிய அவர், பிரான்ஸின் முதலாம் பிரான்சிஸுக்குக் கடமைப்பட்டவராகவும், போப்பாண்டவர் இரண்டாம் ஜுலியஸுக்கு எதிரியாகவும், பன்னிரண்டாம் லூயிக்கும், பிரான்சின் மீது இத்தாலியின் ஆதிக்கத்திற்கும், எதிர்ப்பாளராகவும் அமைந்தார். அவர் சொந்த வாழ்வின் சூழ்நிலையும் தேசியப் பின்னணியும், அவர் சமாதான ஆர்வத்தை மேலும் பலப்படுத்தின.

வன்முறையை எதிர்ப்பதற்கு அவர் வன்மையாகவும் தெளிவாகவும் எடுத்துக் காட்டிய ஆதாரங்களை ஆராய்ந்தால், அவர் கொள்கை உறுதியைச் சந்தேகிக்க முடியாது. *(1)* கொடிய விலங்குகளிடை கூடக் காணப்படாத அளவுக்குப் பயங்கரமான கொலைவெறியாட்டம் மனிதரிடை காணப்படுவது இயற்கைக்கு முரணுனது. *(2)* அதைவிட முக்கிய ஆதாரம், போரினுல் ஏற்படும் நாசத்தில், வெற்றி பெற்றவர், தோல்வி பெற்றவர் என்றிருக்க முடியாது என்பது. போரினுல் கிட்டும் பலாபலன்களை ஆராய்ந்தால்,போரில் ஈடுபட விரும்பும் அதிபதிகூடத், தன் சுயநலன் கருதியே, தன் மனத்தை மாற்றிக் கொ்ள்ள வேண்டும். *(3)* அனைத்தையும் விட மிக மூக்கிய காரணம், போரையும், அதன் விளைவாய், நேரிடும் கேடுகளையும் சமய போதனைகள் அனைத்தும் வன்மையாகக் கண்டித்து விலக்குகின்றன என்பது.

பிளேட்டோ போன்ற அன்ஞேரின் அறிவுரைகளை அவர் எடுத்துக் காட்டிய போது, ஒரு புறம் ஆண்டவனின் ஆக்கினைகளுக்கும் ஆகம அறிவுரைகளுக்கும், மறுபுறம் பெயரளவில் மட்டும் கிறிஸ்துவர்களாய் இருந்த மன்னர்களின் ந ட த் தை க் கு ம், இடையே இருந்த பயங்கர முரண்பாட்டினை அவர் இடித்துக் காட்டினுர். பாஸலேயில் *1523* வெளியிடப்பட்ட புனிதமார்க்கத்தின் தத்துவ விளக்கம் என்ற தமது நூலுக்கு முகவுரையில், சமாதானத்தை நிலை நாட்ட வேண்டுமென்று அவர் விடுத்த உருக்கமான வேண்டுகோள், உண்மையான கிறிஸ்துவ மன்னரான முதலாம் பிரான்சிஸீக்கு விடப்பட்ட வேண்டுகோளேயாகும். ''... மனித வாழ்வை அழிக்கும் கொடிய பயங்கரக் கேடுகளில் மிகக் கொடியது போராகும். அது மனிதர் உயிரை மட்டுமல்ல, ஒழுக்கத்தையும், அறிவையும் பறிக்கின்றது. இறுதியில் ஏசுநாதர் நீதி மன்றத்தின் முன் அனைவரும் நிற்கும்போது, எளியாரிடமும் வலியாரிடமும் ஒரே மாதிரி, கண்டிப்பாக இருக்கும் இந்த நீதிபதி, உலகில் வல்லமை பெற்றிருந்த மன்னர்களிடம் தாட்சண்ய காட்டப் போவதில்லை. இன்று எளியாரை அழித்துச் சூறையாடி, கொளுத்திக் கொன்று குவித்து, நாடு கடத்தும் வல்லமை மிக்க மன்னர்கள், எந்த ஏழை அடிமைகளுக்காகத் தம் ரத்தத்தைச் சிந்திஞரோ, அந்த ஏசுநாதரின் விவேகத்தைக் களங்கப் படுத்துவோர் ஆவர்...''

பர்கண்டி மன்னர் சார்லஸுக்கும் முதலாம் பிரான்ஸிஸுக்கும் இடையே சமரசம் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டுப் போரின் பயங்கர சாபம் மறைவது போல் தோன்றிய சூழ்நிலையில், 1516ஆம் ஆண்டுவாக்கில், 'சமாதானப் புகார்' என்ற நூலில் எராஸ்மஸ் எழுதிய உருக்கமான முடிவுரையிலிருந்து சில பகுதிகளை மேற்கோள்களாகக் காட்டி இக் கட்டுரையை முடிக்க நான் விரும்புகிறேன். இன்று, வியட்னும் போரும், அரபு—இஸ்ரேலிய மக்களிடையே போரும், மூண்டுள்ளன. கொள்கை வெறிக் கொடுமைகளும், காலனி ஆதிக்க அநீதிகளும் இனவெறி, புரட்சி அல்லது போலிப் புரட்சி இயக்கங்கள் ஆகியவற்றின் கொந்தளிப்புகளும், அணுகுண்டின் அபாயமும் ஒரு புறம் நம்மை வாட்டுகின்றன. மறுபுறம், உலகில் சமாதானத்தை நிலைநாட்டப் போப்பாண்டவர் விடுத்த செய்தியும், அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளும், நமக்கு நல்வழி காட்டுகின்றன. இந்நிலையில், ராட்டர்டாம் முனியின் உபதேசங்கள், நமக்கு நேரடியாகவும் தனிப்பட்ட முறையிலும், பொருத்தமானவை, என்பதை நம்மில் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமல்லவா?

எராஸ்மஸ் எழுதினுர்: ''மக்களில் பெரும்பான்மையோர் போரை வெறுத்துச் சமாதானத்தை விரும்புகின்றனர். மக்களைத் துன்பத்தில் ஆழ்த்திச் சொந்த லாபம் சேர்க்க விரும்பும் ஒரு சிலர் போரை விரும்புகின்றனர். பெருவாரியான நல்லவர்களின் விருப்பத்தை, மனிதத் தன்மையற்ற ஒருசிலரின் வெறி வெல்ல வேண்டுமா? பண்டைய வரலாற்றை நாம் ஆராய்ந்தால், உடன்படிக்கைகளாலும், குடும்ப உறவுகளாலும், வன்முறையினுலும் வஞ்சப் பழிச் செயல்களாலும், நிலையான நன்மை எதுவும் இதுவரை கிட்டவில்லை என்பதை உணர்வோம். ஆபத்தைத் தடுப்பதற்குப் பரிவையும் பெருந்தன்மையையும் தவிர வேறு உறுதியான வழியே கிடையாது. போர்கள் இன்னும் பல போர்களை மூட்டுகின்றன. பழிவாங்கும் போக்கு, மேலும் பழிவாங்கும் போக்கைத்தான் பலப்படுகின்றது. இச்சையில் ஈடுபடுவது, இச்சையின் வெறியாட்டத்திற்குத் தான் வழிவகுக்கின்றது. பெருந்தன்மையான பரிவு, மேலும் பெருந்தன்மையான அன்பை ஈர்க்கின்றது. தங்கள் உரிமையைச் சிறிது விட்டுக் கொடுத்தவர்கள் தான் நிலையான நன்மதிப்பைப் பெறுகின்றனர். மனிதனுக்குக் கிட்டுவது அனைத்தும் மனித முயற்சியால் விளைவதல்ல. ஆனுல் கிறிஸ்துவின் வழியைப் போற்றிப் பின்பற்றிச் செய்யப்படும் மனித முயற்சி, அவர் விவேகத்தின் பேரருளால், நிச்சயம் தழைக்கும். சமாதானத்தை விரும்புவோரை தங்கள் உரிமைகளைத் தியாகம் செய்தால் நிலையான பலனடைய முடியும் என்ற தெளிவில், பொது நலனுக்காகத் தியாகம் செய்வோரை கிறிஸ்து காத்து, அவர்களுக்குத் துணை புரிவார்.

''அறமும் இன்பமும் போற்றும் மக்களை, ஆயுத பலத்தாலன்றி, சட்டத்தின் அமைதியால், ஆளும்போது தான், மன்னரின் ஆட்சி உண்மையில் மாட்சி பெறும். பிரபுக்களின் பண்பாடும் தகுதியும் உயரும். சமய குருக்கள், தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை நிம்மதியாக அனுபவிப்பார்கள். சமாதானச் செழிப்பினுலும், மக்கள் மேலும் நலன் பெற்று உயர்வார்கள்''

சமயகுரு புனிதர் பியர், அல்லது கான்ட், நிரந்தரமான சமாதானத்தை வலியுறுத்திச் செய்த உபதேசத்திற்கும், சமாதானத்திற்காக இன்று போராடுவோர் எழுப்பும் உரிமைக் குரலுக்கும், எராஸ்மஸின் அறிவுரைக்கும், தொனியிலும் உணர்விலும், வேறுபாடு இருப்பது உண்மைதான். ஆனுல் போர்மீது போர் தொடுக்க வேண்டுமென்று, ஓயாத சிந்தனைகளாலும் அன்றுடச் செயல்களாலும், உந்தப் படுபவன், எராஸ்மஸின் அறிவுரைகளில், தன் எண்ணங்களின் எதிரொலியைக் கேட்பான்.

இன்று நம் மக்களின் வாழ்க்கை பல்வேறு துறைகளில் விரிவடைந்துள்ளதையும் பல்வேறு தன்மைகளும், நடத்தை நியதிகளும், எதிர்கால நோக்குகளும், விரிந்து பரவியுள்ளதை, அவர் அன்று எதிர்பார்த்திருக்க முடியாதுதான். ஆனுல் ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்பும் அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினை உண்டு. மக்கண்மைவாதம், கிறிஸ்துவ நெறி, இரண்டும் காலத்துக்கு அப்பாற்பட்ட, முழுமுதற் கொள்கை நெறிகள் என்று கருதி, அவை இரண்டையும் ஒன்ருக இணைக்கும், சாத்தியமற்ற முயற்சியில் நாம் ஈடுபடத் தேவையில்லை. ஆனுல் அவர் கல்வி, அரசியல், சமயத் தத்துவங்களின் அடிப்படையாய் விளங்கிய, பரந்த மனப்பான்மையையும், கருத்து சுதந்திரத்தையும், நாம் கற்றுப் போற்ற முடியும். இன்று மைய நிலையை இழந்து, உலகம் சீர்குலைந்து நிற்கிறது. ஆனுல் உலக ஒற்றுமையையும் ஒருமையையும் நிலைநாட்டுவது, நேற்றுப் போலவே, இன்றும் இன்றியமையாப் பணியாக உள்ளது. அந் நிலையில், நம் புதுத் தேவைகளுக்கும் வாய்ப்புகளுக்கும் ஏற்ப, மனிதத் தன்மைக்கு ஒத்த ஓர் உணர்வையும் உறவையும் நாம் உருவாக்க முடியும்.

''உலகுக்கு இயல்பான ஓர்ஒழுங்கு நியதி உண்டு. அதை நாம் குலைக்க முயலக் கூடாது'' என்று எராஸ்மஸ் நம்பினுர். அக்கருத்து இன்றும் தன் முக்கியத்துவத்தையோ, பொதுமை நோக்கையோ, இழக்கவில்லை. பொதுமை நெறியைப் போற்றிய மற்ருெரு சிந்தனையாளரான ஃபிக்டே கூறினுர்: ''மண்ணுலகில், மனித வாழ்வின் கு றி க் கோ ள், மோட்சத்தை அடைவதோ, நரகத்தை அடைவதோ, அல்ல. நம்மகத்தே நாம் தாங்கியுள்ள மனிதத்தன்மை பக்குவம் பெற்று பூர்ணத்துவம் அடையச் செய்வதே, அக் குறிக்கோள்''. எராஸ்மஸின் கருத்துதான் இக் கூற்றிலும் பொதிந்துள்ளது.

தமிழில்: கா. திரவியம்

Edited and published by T. P. Meenakshisundaran for the Southern Languages Book Trust, 441, Poonamallee

பாரசீகப் பதிப்பு
இப்போது
வெளிவந்துள்ளது



13 மொழிகளில் 'யுனெஸ்கோ கூரியர்'

யுனெஸ்கோ கூரியரின் முதல் பாரசிகப் பதிப்பு வெளியாகியுள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, தமிழ், ஸ்பானிய, ரஷ்ய, ஜெர்மானிய, அராபிய, ஜப்பானிய, இத்தாலிய, ஹீப்ரு, பாரசீக மொழிகளில் யுனெஸ்கோ கூரியர் வெளிவருகின்றது. அமெரிக்கப் பதிப்பைச் சேர்த்து மொத்தம் 13 பதிப்புகள்.

யுனெஸ்கோவின் ஈரானிய தேசியக்குழு, 1/154, அவென்யூ ருஸ்வெல்ட், த. பெ. 1533, டெஹ்ரான், பாரசீகப் பதிப்பை வெளியிடுகின்றது.

புத்தாண்டுப் பரிசாக

யுனெஸ்கோ கூரியருக்குப் பல நன்கொடை சந்தாக்கள் அனுப்புங்கள்

ஆண்டுச் சந்தா ரூ. 10-50
கல்வி நிலையங்களுக்கு ரூ. 9-50

கிடைக்குமிடம் :
தென் மொழிகள் புத்தக டிரஸ்ட்,
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம் :: சென்னை-10.

உங்கள் நன்கொடையை மாதந்தோறும் நண்பரும் உறவினரும் நினைத்துக் கொள்வர்

யுனெஸ்கோ கூரியர் - தமிழ்ப் பதிப்பு

ஐ. நா. வின் அங்கமாக உலக கல்வி, விஞ்ஞான, கலாச்சார மேம்பாட்டுக்கு இடையறுது பாடுபட்டுவரும் யுனெஸ்கோ அமைப்பின் மாத வெளியீடே 'யுனெஸ்கோ கூரியர்' இதழ்.

பலதுறை அறிவும் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய பதின்மூன்று உலக மொழிகளில் வெளிவரும் 'யுனெஸ்கோ கூரியர்' இதழ் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழிலும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

உலகைக் காட்டும் பலகணியாக அமைந்துள்ள இவ்விதழ் உலகம் முழுவதற்கும் அக்கறையுள்ள பிரச்னைகளைப்பற்றி உலக அறிஞர்கள் பலரும் எழுதும் சிந்தனை வளமிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்ட அறிவுக் களஞ்சியமாக மாதந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

அகில உலகப் பிரச்னைகளை நடு நிலைமையில் அணு அணுவாக அறிந்துகொள்ள உதவும் ஒரே சர்வதேச தமிழ் இதழ் இதுவே யாகும்.

பக்கத்துக்குப் பக்கம் ஏராளமான படங்களையும் கவர்ச்சியான அழகிய அச்சு, அமைப்பும் கொண்ட இவ்விதழை மாணவர்களும் கல்வி நிலையங்களும் நூலகங்களும்—ஏன்—அறிவுத்தாகம் கொண்ட அனைவருமே இதழின் சந்தாதாரராகச் சேருவதன் மூலம் தம் உலக அறிவை வளர்க்க-வளப்படுத்திக்கொள்ள அருமையானதோர் வாய்ப்பு.

ஆண்டுச் சந்தா ரூ. 10-50 கல்வி நிலையங்களுக்கு ரூ. 9-50 தனிப்பிரதி ரூ. 1-00.

தொடர்பு கொள்க:
தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்,
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம் : : சென்னை-10.

எராஸ்மஸ்

எக் காலத்திற்குமுரிய அனைத்துலகச் சிந்தனையாளர்

ஜெர்மானிய மறுமலர்ச்சியின் உருவப்பட ஓவியமும் சமய ஓவியருமான புகழ்மிகு ஹான்ஸ் ஹால்பெய்ன், எராஸ்மஸின் (10 செ. மீ. விட்டமுள்ள) இச்சிறு பதக்கத்தைச் செய்தார். எராஸ்மஸுக்கு 60 வயதான பிறகு 1532இல் இது வரையப்பட்டது. மாபெரும் டச்சு மனித இனநலக் கோட்பாட்டாளருடன் தமது இளமை முதல் நட்புக் கொண்டிருந்த ஹால்பெய்ன் வரைந்த பல உருவங்களில் இஃது ஒன்று, எராஸ்மஸ் தாம் பிறந்து 5 நூற்றாண்டுகளுக்குப் பிறகும் சமயப் பொறுமை, நடுநிலைமை, அனைத்துலக நோக்கு போன்றவற்றில் இக்கால உலகுக்கு இன்னும் வழிகாட்டுகிறார்.

(4 ஆம் பக்கக் கட்டுரை காண்க)

Medallion located at Offentliche Kunstsammlung, Basel
Photo Netherlands Ministry of Education and Science